Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 25 திங்கட்கிழமை (09.03.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 160

## "புதினப்பலகை" ஆசிரியர் கி.பி.அரவிந்தன் காலமானார்



புதினப்பலகை ஆசிரியரும், புதினப்பலகை குழுமத்தின் முதன்மைப் பங்காளரும், ஈழ விடுதலைப் போராட்ட முன்னோடிகளில் ஒருவருமான கி.பி.அரவிந்தன் (கிறிஸ்தோபர் பிரான்சிஸ்) நேற்று பிரான்ஸில் காலமானார். கடந்த ஐந்து ஆண்டுகளாக புற்றுநோயுடன் போராடி வந்த அவர், பிரான்சில் உள்ள மருத்துவமனையில் காலமானார்.

கவிஞரும், எழுத்தாளருமான கி.பி.அரவிந்தன், ஈழ விடுதலைப்

19 ஆம் பக்கம் பார்க்க

# அத்துமீறல் அதிகரிப்பு

## ஆட்சி மாற்றத்தின் பின்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னரே இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளதாக யாழ். மாவட்ட கடறறொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவுடன் மீனவர்களின் பிரச்சினை குறித்து கலந்துரையாடினேன்.

இந்தச் சந்திப்பின் போது இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு மாற்றம் கிடைத்துள்ள போதிலும் மாற்றத்தின் பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளதுடன், கடந்த சில நாட்களுக்கு முன்னர் இந்திய மீனவர்கள் வடபகுதி மீனவர்கள் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்களை நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் பேச்சு



வார்த்தையின் ஊடாக கோவை ஒன்றை தயாரித்து தீர்வு காண வேண்டும் என அவர் மேலும்

19 ஆம் பக்கம் பார்க்க

## கழிவு எண்ணெய் கிணறுகள் தகவல்கள் பதிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாகக் கூறப்படும் கழிவு ஓயிலினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் தொடர்பான விவரங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் வலி. தெற்கு, வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலிகாமம் வடக்கு மற்றும் தெற்கு பிரதேச செயலர் பிரிவுகளால் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமாகாண விவசாய மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சினால் உருவாக்கப்பட்ட தூய நீருக்கான செயலணியினால் படிவங்கள் வழங்கப்பட்டு தகவல் சேகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

19 ஆம் பக்கம் பார்க்க

## இடமாற்றம்

(கொழும்பு)

பொதுமக்கள் சமாதானம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சின் செயலாளரின் அனுமதியின் படி, பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் நால்வர் உள்ளிட்ட 23 உயர் மட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## முடிவிற்கு வந்தது உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

சிலம்பு அமைப்பின் ஏற்பாட்டில், காணாமற்போனோரின் உறவினர்களால் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மாலை 3.30 மணியுடன் நிறைவுக்கு வந்தது.

இளம் விதவைகளின் கண்ணீருக்கு பதில்கூற வேண்டும்,

19 ஆம் பக்கம் பார்க்க

### வவுனியா எல்லையோரங்களில்

## சிங்கள மக்களையும் குடியேற்ற வேண்டும்



(வவுனியா)

வவுனியாவின் எல்லையோரங்களில் இருந்த சிங்கள மக்களையும் மீள்குடியேற்ற வேண்டும் என மீன்பிடி, போக்குவரத்து மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். வவுனியா, கற்பகபுரம் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் உள்ள பல

19 ஆம் பக்கம் பார்க்க

## மூடுவிழா காண்கிறது மத்தல விமான நிலையம்

(கொழும்பு)

மத்தல மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் ஊடான அனைத்து விமான சேவைகளையும் நிறுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வரும் ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம், மத்தல விமான நிலையத்தில் பயணிகள் விமானங்களைத் தரையிறக்குவது முற்றிலுமாக நிறுத்தப்படவுள்ளதாக, விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் உதவித் தலைவர் சஞ்சீவ விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

மாதம் 250 மில்லியன் ரூபாவை இந்த விமான நிலையத்தின் பராமரிப்புக்காக செலவிட்ட போதிலும், கடந்த மாதம் இரண்டே இரண்டு பயணிகள் மாத்திரம், இந்த விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில், இந்த விமான நிலையத்துக்கு பெருமளவு பணத்தைச் செலவிடுவது

19 ஆம் பக்கம் பார்க்க

# உடன்படிக்கைகளை மதிக்க வேண்டும்

## வலியுறுத்துகிறது சீனா



(கொழும்பு)

கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளதையடுத்து, சீனத் தூதுவர் யி ஜியான்லியாங், அவசரமாக பிரதமர் ரணில் மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்களவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது, சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட இருதரப்பு உடன்பாடுகள், வர்த்தக உடன்பாடுகளை மதித்து நடக்குமாறும், சீன முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தத் தகவலை கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

இருநாடுகளுக்கும் நன்மை தரக்கூடிய உடன்பாடுகளை இலங்கை தொடர்ந்து மதித்து நடக்க வேண்டும் என்றும் சீனத் தூதுவர் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கொழும்புத் துறைமுக நகர திட்டத்தை உடனடியாக

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் பிரச்சினையை மனிதநேயத்துடன் அணுகுங்கள்

### பிரதமர் ரணிலிடம், சுஷ்மா வலியுறுத்து

(கொழும்பு)

மீனவர்கள் பிரச்சினையை மனிதநேயத்துடன் அணுக வேணடும். இத்தாலி கடற்படை வீரர் பிரச்சினையுடன் இதை ஒப்பிடக் கூடாது என இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், பிரதமர் ரணிலிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பகுதிக்குள் இந்திய மீனவர்கள் ஏன் வருகின்றனர். இந்திய மீனவர்கள், இந்திய எல்லைக்குள் மீன் பிடிக்கட்டும். ஒருவர் என் வீட்டில் கொள்ளை அடிக்க முயன்றால், நான் அவரை சுடலாம். சட்டம் அதை அனுமதிக்கிறது. நாங்கள் உங்கள் மீனவர்கள் மீது பெருந்தன்மை காட்ட வேண்டும் என்றால், நீங்கள் அதே பெருந்தன்மையை இத்தாலியைச் சேர்ந்த கடற்படை வீரர்கள் மீது காட்டியிருக்க வேண்டும் இவ்வாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து இந்திய வெளியுறவு செயலர் அக்பருதீன் கூறியதாவது,

இலங்கைப் பிரதமரிடம் இந்திய மீனவர் பிரச்சினையை மனிதநேயத்துடன் அணுக வேண்டும் என்றும், இது, அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை என்றும் அமைச்சர் சுஷ்மா கூறினார்.

மேலும், இத்தாலி கடற்படை வீரர் பிரச்சினையுடன், இந்திய மீனவர் பிரச்சினையை ஒப்பிடக்

19 ஆம் பக்கம் பார்க்க

## வினாத்தாள் இணையத்தில்

உயர்தரப் பரீட்சையின் தொழில்நுட்ப பாடத்திட்டத்தின் முன்னோடி வினாத்தாள்கள் மற்றும் மாதிரி வினாக்கள் அடங்கிய நூல் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளமான (www.doenets.lk) இல் வெளியிடப்பட்டுள்ளது.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | திங்கட்கிழமை |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | புதுயுகம் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 12.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | நகைச்சுவை திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# தகுதியான அதிபர்களுக்கு பொருத்தமான பாடசாலைகள்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகள் பலவற்றிற்கு இன்னும் பொருத்தமான அதிபர்கள் நியமிக்கப்படவில்லை. என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளதோடு, பொருத்தமான அதிபர்களை நியமனம் செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசியல் செல்வாக்குகளுடன் பலர் பொருத்தமில்லாத பாடசாலைகளில் அதிபர்களாக உள்ளனர்.

அவர்களில் சிலர் அதிபர் சேவைத்தரம் குறைந்தவர்களாக உள்ளதனை ஏனைய அதிபர்கள் சங்கத்திடம் சுட்டிக் காட்டி தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் முறையிட்டுள்ளனர்.

அண்மையில் மத்திய கல்வி அமைச்சு நடாத்திய நேர்முகப் பரீட்சையில் பல அதிபர்களுக்கு அதிபர் சேவைத்தரம்-I கிடைக்கப்பெற்றுள்ளது. அவர்களுக்கு Iஏபி பாடசாலைகள் வழங்கப்படவேண்டுமென்ற நியமத்தின் அடிப்படையிலும், அத்தகைய பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடத் தன்மையைக் கருத்தில் கொண்டும் அவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறான பாடசாலைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவே அதிபர் சேவைத்தரம்-I பகிரப்பட்டுள்ளதாகவும் அறியப்படும் நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிபர்களின் சேவைத் தரங்களுக்கு ஏற்ப பாடசாலைகளை வழங்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவ்வாறு கிடைக்கப்பெறாதவர்கள் தமது முறைப்பாட்டை மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரிடம் எழுத்துமூலம் கொடுத்து, அதன் பிரதியின்னை தலைவர் அல்லது பொதுச்செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், 131. கண்டி வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிர்வாகச் செயலாளர் கே.நல்லதம்பி அறிவுறுத்தியுள்ளார்.

# மல்லாவி வைத்தியசாலையை தரமுயர்த்த நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மல்லாவி பிரதேச வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், நேற்றுத் தெரிவித்தார.

சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களின் மருத்துவ தேவைகளை நிறைவு செய்யும் வைத்தியசாலையாக மல்லாவி வைத்தியசாலை காணப்படுகின்ற போதும் போதிய வசதிகள் இன்றி காணப்படுகின்றது என்றும் அவர கூறினார்.

இந்நிலையில், வடமாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு சத்திரசிகிச்சை பிரிவு அமைக்கப்படவுள்ளது. வைத்தியசாலையின் வளங்களை அதிகரித்து, அதனை ஆதார வைத்தியசாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேபோல், புதுக்குடியிருப்பு மற்றும் மன்னார் முருங்கன் வைத்தியசாலைகளையும் ஆதார வைத்தியசாலைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.


# அகவை 52 இல்

## சேவை நாயகனை வாழ்த்துகின்றோம்

(ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளர்,
நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர்)

09.03.2015

திரு.அம்பலம் இரவீந்திரதாசன் (J.P)



சேவை நாயகனே...

மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கூற்றுக்கு எடுத்துக்காட்டாக மண்ணுலகில் அவதரித்தாய்... பற்றின்றி சேவைகள் செய்திடவே பாரினில் தோன்றினாய். சோதனைகள் எதிர்கொண்ட போதிலும் முகம் கோணாமல் துணிந்து நின்றாய். மக்கள் பலம் உன்னருகே ஒன்றுசேர யுகத்தினில் நிலையான இடம் கொண்டாய். நாடி வரும் மக்களை இன்பமுகத்தோடு எதிர்கொண்டுஅவர்களின் இன்னலை நீ பெற்று அகம் குளிர அன்பான வார்த்தைகள் செப்பிடுவாய். தேவைகள் எதிர்பார்க்கும் காலத்திலும் தனக்கென எதையும் நோக்காது சேவையே முதற்கடமை என செய்திடுவாய். 51 வருடங்கள் பூமியில் தோன்றி எண்ணற்ற பல சேவைகளை இரவு பகலாக மேற்கொண்டு வந்தாய். இன்னும் பல சேவையினை இப் பாரினில் செய்திட பல்லாண்டு காலங்கள் உமது குடும்பத்தோடு வாழ வாழ்த்தும் நன்றி மறவா நெஞ்சங்கள்... வாழ்க உம் சேவை, ஓங்குக உமது சேவைக்கரம், வாழ்க வளமுடன்.

வாழ்த்துவோர்....

பொற்பதி சனசமூக நிலையம் கொக்குவில் கிழக்கு, அரியாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், அரியாலை கிழக்கு கடற்றொழிலாளர் சங்கம், அரியாலை கிழக்கு சன சமூக நிலையம், நாவலடி அரியாலை மாதர் சங்கம், பூம்புகார் அரியாலை மாதர் சங்கம், மணியம்தோட்டம் மாதர் சங்கம், மணியம் தோட்டம் சன சமூக நிலையம், மணியம் தோட்டம் பெரியதோட்டம் கிராம அபிவிருத்திச் சங்கம், கல்திட்டி கொக்குவில் மேற்கு ஞான வைரவர் சனசமூக நிலையம், இந்திரா விளையாட்டுக் கழகம் தலையாழி கொக்குவில் கிழக்கு, கலைச்சுடர் சனசமூக நிலையம் திருநெல்வேலி, மகாத்மாஜி சனசமூக நிலையம் திருநெல்வேலி, மகளிர் அபிவிருத்திக் குழு திருநெல்வேலி, அமரகவி மாதர் சங்கம் கோண்டாவில் மேற்கு, முள்ளி யாழ்.இசை சனசமூக நிலையம், சங்கிலியன் தோப்பு மகளிர் அபிவிருத்திக் குழு (நட்சத்திரப் பெண்கள்), ஆத்திசூடி கந்தர் மடம் கிராம அபிவிருத்திச் சங்கம், கலைமகள் சனசமூக நிலையம் கல்வியங்காடு, T - 14 ஆட்டோச் சங்கம் பரமேஸ்வராச் சந்தி திருநெல்வேலி, கதிரொளி மாதர் சங்கம் அரசடி நல்லூர், ஜனசக்தி சனசமூக நிலையம் அரசடி நல்லூர், திருமகள் மாதர் சங்கம் அரியாலை, லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஆனைக்கோட்டை கொக்குவில் மேற்கு, வண்.வடமேற்கு மாதர் சங்கம் கொக்குவில் மேற்கு , நீராவியடி மாதர் சங்கம்.

# அப்படியா சங்கதி?

ம. அய்யம்பிள்ளை

கரைச்சியில் காணி படைக்குச் சுவீகரிப்பு. மருதங்கேணியிலும் மக்கள் காணி சுவீகரிப்பு என்று 07.03.2015 அன்று உதயன் பத்திரிகையில் இரண்டு செய்திகளைப் படித்தேன்.

நெஞ்சு ஒரு கணம் 'திக்' என்றது.

இது நடக்குமா? அதுவும் ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு?

மைத்திரி – ரணில் கூட்டாட்சியில் இதற்கு சாத்தியமே இல்லை. ஏனென்றால் இந்த அரசாங்கத்தை வெற்றியடையச் செய்ததே தமிழ் மக்கள் அல்லவா?

இது மட்டுமல்ல, இந்த அரசாங்கத்தின் உயர் சபையான 'தேசிய சபை'யில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மனோகணேசன் போன்ற நம்மட ஆட்கள் இருக்கும் போது இப்படி நடக்குமோ?

நம்ப முடியாது. நம்பவே முடியாது.

இருக்காது. அப்படி இருக்க முடியாது.

தேர்தலுக்கு முதல் 30.12.2014 அன்று யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த முன்னாள் ஜனாதி–பதி சந்திரிகா, ரணில், மைத்திரி, சரத் பொன்சேகா கூட்டணி யாழ்ப்பாணத்தில் வைத்தே சொன்னது 'பறிக்கப்பட்ட காணிகள் மீளளிக்கப்படும்' என்று.

இந்த செய்தியை இதே உதயன் பத்திரிகை 31.12.2014 அன்று இந்த செய்தியை பெரிய எழுத்தில் – முன்பக்கத்தில் போட்டிருந்தது.

இதை நம்பித்தானே தமிழ்ச் சனங்கள் மைத்திரிக்கும் ஆட்சி மாற்றத்திற்கும் வாக்களித்தார்கள்.

அதாவது இனிமேல் நிலப்பறிப்பு நடக்காது. நடக்கவே நடக்காது. பறித்த நிலங்களும் மக்களுக்கு மீளளிக்கப்படும் என்று நம்பியல்லவா வாக்களித்தார்கள்.

அப்படி இருக்கும்போது, இதென்ன, இப்பொழுது இப்படியொரு செய்தி?

இதை நம்ப முடியாது. நம்பவே முடியாது.

அல்லது முன்னர் வந்த செய்தியை நம்ப முடியாது.

இதில் எது பொய்? எது உண்மை?

அல்லது இரண்டுமே பொய்தானா?

அல்லது இந்தப் பத்திரிகையில் வருகின்ற எல்லாமே பொய் தானா?

ஐயோ கடவுளே!

ஒன்றுமே புரியவில்லை.

தலையை சுற்றுகிறதே.

ஆட்சி மாற்றம் என்றார்கள். பறிக்கப்பட்ட காணிகள் மீளளிக்கப்படும் என்றார்கள். ஐ.நா விசாரணை நடக்கும் என்றார்கள். நிலப்பறிப்புக்கு இனி இடமில்லை என்றார்கள். எல்லாமே இனி நன்றாக நடக்கும் என்றார்கள்.

ஆனால், இப்பொழுது படை விலகல் நடக்காது என்றல்லவா சொல்கிறார்கள். நிலப்பறிப்பு – காணி சுவீகரிப்பு எல்லாம் நடக்கும் என்கிறார்களே ஐ.நா விசாரணை நடக்காது என்கிறார்கள்.

என்னப்பா நடந்து கொண்டிருக்கிறது நாட்டில்?

நடக்கும் என்பார் நடக்காது.

நடக்காது என்பார் நடந்துவிடும்

என்று றேடியோவில பாடுற பாட்டுக்கூட நம்மைக் கேலி செய்கிறதா?


உதயன்
மாசி 23 சனிக்கிழமை 2015
விடுதலை செய்க
வலியுறுத்தி கொழும்பில் ஆர்ப்பாட்டம்
கரைச்சியில் காணி படைக்கு சுவீகரிப்பு
இலங்கை தலை நிமிர்வது எப்போது?
மருதங்கேணியிலும் மக்கள் காணி சுவீகரிப்பு
வலி.வடக்கில் மீள்குடியமர்வு
உதயன்
மார்கழி 14, புதன் 2014
...லையெனத் திரண்டனர்
...து எதிரணியின் பரப்புரைக் கூட்டத்தில்
பறிக்கப்பட்ட காணிகள் மீளளிக்கப்படும்

# பொதுவாழ்வின் அனுபவங்கள் இலக்கிய வடிவம் பெறவேண்டும்

## பேராசிரியர் மிகுந்தன் கோரிக்கை

(யாழ்நிருபர்)

பெற்றோர் என்ற நிலையில் வாழ்ந்து கொண்டு உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது அனுபவங் களை சிந்தனைகளை ஆக்க இலக் கியங்கள் ஊடாக சமூகத்திற்கு வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

இவ்வாறு யாழ்பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட முது கல்விமாணி அணியினரின் 'முதிர முகை' நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய பேராசிரி யர் கு.மிகுந்தன் தெரிவித்தார்.

செல்வி ஜெயகந்தையா தலை மையில் நடைபெற்ற இந் நிகழ் வில் பேராசிரியர் கு.மிகுந்தன் தொடர்ந்து பேசுகையில்,


தமிழ் மக்களுடைய வாழ்வில் கலையும் கலாசாரமும் நெருங்கிப் பிணைந்துள்ளன. குடும்பச் சூழலில் பல்வேறு கஷ்டங்களையும் எதிர் நோக்கிய நிலையில் நீங்கள் உயர் கல்வியைத் தொடர்கிறீர்கள். உங் களுடைய கஷ்டங்கள், துன்பங் களை நாம் அறிவோம் இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியிலும் ஆவ ணத் தொகுப்பாக இம்மலரை வெளிக்கொண்டு வந்துள்ளீர்கள். இம் மலர் இலத்திரனியல் பதிப் பாக வெளிவரவேண்டும்.

உயர் கல்வி அமைச்சும் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவும் ஆய்வு நூல்களை வெளி யிடுவதற்கு பெருமளவு நிதி யினை ஒதுக்கி வருகிறது. இந் நிதியினைப் பயன்படுத்தி எதிர் காலத்தில் மேலும் பல ஆய்வு நூல்கள் வெளிவரவேண்டும்.

தமிழ் மொழியில் முதுகல்வி மாணி வழங்குவதில் யாழ் பல்கலைக்கழகம் தனித்துவ மானது. முதிர்ச்சியடைந்த சமூக அந்தஸ்த்து மிக்க பலர் இக் கற்கைநெறியூடாக பயன் பெறு கின்றனர். உங்களுடைய பயன் பாடு படைப்பிலக்கியமாக சமூகத் திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். அதற்கு இத்தகைய வெளியீடுகள் உதவும் எனக் குறிப் பிட்டார்.

உயர்பட்டப்படிப்புகள் பீட இணைப்பாளர் கலாநிதி ஜெயலக் சுமி இராசநாயகம், கல்வியில் துறை தலைவர் கலாநிதி அனு சியா சத்தியசீலன், கலாநிதி ரி.கலா மணி, பேராசிரியர் மா.சின்னத் தம்பி, பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி னர்.

இதழாசிரியர் ப.இராஜேஸ்வரன் நன்றி தெரிவித்து உரை நிகழ்த் தினர். (10)


புட்டணிப் பிள்ளையார் ஆலயத்தின் பூங்காவனத்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றபோது...

# நேர்முகப்பரீட்சைக்கு பின்னரும் ஆளணிப்பற்றாக்குறை உள்ளது

யாழ்மாவட்டத்தில் பிரதேச சபைகளில் ஏற்பட்டுள்ள ஆளணி பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய பிரதேச சபைகளினால் அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்று ஆறு மாதங்களுக்கு மேலாகியும் அப்பதவிகள் இதுவரை நிரப்பப்படவில்லை.

இதனால் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் மனவிரக்தி யடைந்துள்ள அதேவேளை மக்களுக்குத் திருப்திகரமான சேவையை உடனுக்குடன் செய்ய முடியாத நிலை பிரதேச சபைகளுக்கு ஏற் பட்டுள்ளது. யாழ்மாவட்டத்திலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபை களில் ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருகிறது. இதனால் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியாத நிலை காணப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர். (10)

# ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலைபண் பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகை யின் மாசிமாத இதழ் வெளிவந்துள்ளது.

இதில் மனிதப் பண்புகள், போற் றித் திருவகல், அன்பின் மகத்துவம், சைவநெறி, உயிரினும் மேலான ஒழுக் கம், சைவ சமய வினாவிடை சித்தர்களின் ஞானம் போன்ற பல ஆன்மீக கட்டுரை களை தாங்கி வெளிவந்துள்ளது.



பதவி உங்களுக்குப் பெருமை தருவதைவிட நீங்கள்தான் அதைப் பெருமைப்படுத்த வேண்டும். - பெர்நார்க்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தமிழர்களின் சந்தோஷம்?

தமிழ் மக்கள் மிக மிக சகிப்புத்தன்மை உடையவர்கள் என்றார் நண்பர். திடீரென்று என்ன இந்தக் கண்டுபிடிப்பு என்று ஆச்சரியத்தோடு கேட்டோம். அவர் சொல்லத் தொடங்கினார்.

"எவ்வளவு அடிச்சாலும் தாங்குறான்.... இவன் ரொம்ப நல்லவன்டா...." என்று தன்னை அடி அடியென்று அடித்துவிட்டுப் போனவர்கள் சொல்லிவிட்டுப் போனதாக வடிவேலு ஒரு படத்தில் விம்மலோடு சொல்வாரல்லவா....

அதுபோலத்தான், வருகிற போகிற வெளிநாட்டுப் பிரதிநிதிகளெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து திரும்பத் திரும்ப ஒரேவிதமான அறிவுரைகளைச் சொல்லிவிட்டுப் போக, இவர்களும் அவர்கள் போனபிறகு தமிழ்மக்களிடம் வந்து,

"நமது பிரச்சினைகளை விரிவாக அவர்களுக்கு எடுத்துச் சொன்னோம்... அவர்களும் உன்னிப்பாகக் கேட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள்..." என்பதை ஆயிரத்தோராவது முறையும் அதே சுருதியோடு சொல்ல, நமது மக்களும் அக்கறையாக கேட்டுவிட்டு,

பதிலுக்கு கேள்வி எதுவும் கேட்காமல், தலைவர்கள் மாற்றத்தைக் கொண்டுவந்து கொண்டிருக்கிறார்கள் என்று நம்பிக்கையோடு பார்த்திருக்கிறார்களே.... இதுபோல் சகிப்புத் தன்மை உலகில் வேறெந்த மக்கள் குழுவினரிடமாவது உண்டா?

இப்போது சுஷ்மா ஸ்வராஜூம் வந்து "நீங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஒருமித்து என்ன தீர்வு வேண்டும் என்பதைச் சொல்ல முடியும்..." என்பதைப் பாந்தமாகச் சொல்ல பதவிசாகக் கேட்டுவிட்டு வந்திருக்கிறார்கள்.

நாளையே நரேந்திர மோடி அவர்கள் வந்தும் "நீங்கள் ஒற்றுமையாகப் போய் தமிழர்களுக்கு என்ன வேண்டும் என்பதை அரசிடம் பேசுங்கள்... பேச்சைத் தொடங்குவதற்கு 13வது திருத்தம் நல்லதொரு ஆரம்பமாக இருக்கும்" என்பதை நூற்றியோராவது முறையும் சொல்வார்.

இவர்கள் பதவிசாகத் தலையாட்டிவிட்டு வருவார்கள். பிறகு தமிழ் மக்களிடம் வந்து அதே பழைய பூப்பந்தை அவிழ்த்தெடுத்து மறுபடியும் சுற்ற ஆரம்பிப்பார்கள்.

"மோடி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கும் வந்து பார்த்தார். இங்குள்ள நிலைமைகளைப் புரிந்துகொண்டார் (முந்தி எதுவும் புரியாதவராக இருந்தாராம்...!) நாங்களும் நிலைமைகளை விளக்கிச் சொன்னோம். கூர்மையாகக் கேட்டறிந்து கொண்டார் (எல்லாமே அவருக்குப் புதிய செய்திகளல்லவா...!) விரைவில் இங்கு மாற்றம் நிகழும்."

இதைக் கேட்ட மாத்திரத்திலேயே, நமது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தலைவர்கள் மும்முரமாக அலுவல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று திருப்தியடைந்துவிடும் இந்த சமூகத்தின் சகிப்புத் தன்மையை யாரும் இளப்பமாகப் பேச முடியுமா?

என்ன மாற்றம்? எப்படி நிகழும்? எப்போது அது நிகழத் தொடங்கும்? என்று எந்தக் கேள்வியுமே கேட்காமல், சுஷ்மா வரவையும் மோடி வரவையும் பின்னர் யார் யாருடையதோவெல்லாம் வரவையும் நமது ஊடகங்கள் எப்படி செய்தியாக்கும் என்பதும் நாமறிந்ததே!

இன்னாரை நமது தலைவர்கள் சந்தித்து விரிவாகப் பேசினார்கள்; அவர்களும் நம் தலைவர்களைச் சந்திப்பதை முக்கியமாகக் கருதியிருந்தார்கள் என்ற செய்தியை மட்டும் மக்களுக்குத் தெரிவிப்பதோடு நமது ஊடகங்களின் "இடித்துரைக்கும்" கடமையும் முடிந்துவிடுகிறது.

தமிழ்த் தேசியத் தலைவர்களைச் சங்கடப்படுத்தும் கேள்விகளைக் கேட்பது, சிங்கள அரசுக்குத் துணைபோகும் துரோகச் செயலாகி விடுமல்லவா?

நம்மால்தான் முடியாமல் போய்விட்டது – சர்வதேசத்தின் நெருக்குதலில் சிங்கள அரசு தடுமாறி முழிபிதுங்குவதைப் பார்க்கும் சந்தோஷம் ஒன்றுதானே தமிழர்க்கு வேண்டியது? அதற்கு மேல் என்ன வேண்டியிருக்கிறது? - *ஆசிரியர்*

# அமெரிக்காவின் தாளத்துக்கு ஆடுகிறது புதிய அரசு

## இது விமலின் சீற்றம்

(கொழும்பு)

சீனாவினால் முன்னெடுக்கப்படும் கொழும்பு போட்சிட்டி திட்டத்தை அமெரிக்காவும், இந்தியாவும் தடுத்து நிறுத்த விரும்புகின்றன. தற்போதைய அரசாங்கமும் அதனை நிறைவேற்ற முயல்கிறது. அவர்களின் கைப்பொம்மையாக அரசு செயற்படுகிறது என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்கக் கோரி கண்டியில் இடம்பெற்ற பேரணியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் குறிப்பிட்ட திட்டத்தை நிறுத்த முடியுமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கண்டியில் தான் உரையாற்றிகொண்டிருக்கும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையை பகிரங்கப்படுத்துமாறும் அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு சவால் விடுத்துள்ளார்.

நாங்கள் இழந்துகொண்டிருக்கின்ற சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் கொண்டுவருவதற்கான போராட்டமிது எனவும் அவர் தெரிவித்துள்ளார். நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பிளவு படுத்த முயலவில்லை. அதனை வேறு யாரோ செய்துவிட்டனர்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை கொண்டுள்ள கட்சியின் உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவின் காலின் கீழ் விழுந்து கிடக்கின்றனர். எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இராஜதந்திர சேவையில் அவசர மறு சீரமைப்பு

வெளிநாடுகளில் உள்ள 27 இலங்கைத் தூதரகங்களுக்கு புதிய தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான பட்டியல் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவினால், நாடாளுமன்ற உயர் பதவிக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஐக்கிய நாடுகளுக்கான புதிய வதிவிட பிரதிநிதியாக இராஜதந்திரி கலாநிதி ரொஹான் பெரேரா நியமிக்கப்படவுள்ளார்.

அதேவேளை தற்போதைய வதிவிடப்பிரதிநிதி பாலித கோஹன உள்ளிட்டோர் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். வெளியுறவு அமைச்சின் முன்னாள் செயலாளர் சேனுகா செனவிரட்ன பாங்கொக்குக்கான தூதராக நியமிக்கப்படவுள்ளார்.

அதேவேளை, மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது பதவியில் அமர்த்தப்பட்டிருந்த அட்மிரல் திஸார சமரசிங்க, லக்ஷ்மன் ஹூலுகல்ல, வசந்த கரணகொட, எயார் மார்சல் ஜெயலத் ஜெயக்கொடி உள்ளிட்டோர் மீண்டும் இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## சனல் - 4 காணொளியின் சிங்கள மொழியாக்கம்

### பிரித்தானியாவில் வெளியிட முயற்சி

சனல் - 4 ஊடகவியலாளர் கலம் மக்ரேயின் இலங்கை தொடர்பிலான மற்றொரு காணொளி பிரித்தானிய நாடாளுமன்றில் எதிர்வரும் 10 ஆம் திகதி காட்சிப்படுத்தப்படவுள்ளது. "நோ பயர் ஸோன்" என்ற காணொளியின் சிங்கள மொழியாக்கமே இவ்வாறு காட்சிப்படுத்தப்படவுள்ளது. லீ ஸகொட், ஸ்வலாக் மெக்டொனாவ் உள்ளிட்ட பிரித்தானியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

நாடாளுமன்றின் 21 ஆம் இலக்க அரங்கில் காணொளி காட்சிப்படுத்தப்படவுள்ளது. தடை செய்யப்பட்ட இயக்கமொன்று தொடர்பிலான காணொளியை காட்சிப்படுத்தக்கூடாது என பிரித்தானிய வாழ் இலங்கையர்கள் சிலர் கோரியதாகவும், அந்தக் கோரிக்கை பலனளிக்கவில்லை எனவும் சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரித்தானியாவுக்கு விஜயம் செய்துள்ள நிலையில் இந்தக் காணொளி காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடு திரும்பினார் சந்திரிக்கா அரசுடன் ஒத்து ஓட முடிவு

## கட்சி யாப்பில் விரைவில் திருத்தம்

சில வாரங்களுக்கு முன் திடீரென லண்டன் சென்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க மீண்டும் நாடு திரும்பி இருக்கின்றார். மகிந்த ராஜபக்ஷ போன்ற ஒருவருடன் சமமான பதவியை சுதந்திரக் கட்சி வழங்கிய விடயத்தில் தனது அதிருப்தியைத் தெரிவித்து கட்சிக் கூட்டங்களில் கலந்துகொள்வதை தவிர்த்தே அவர் லண்டன் சென்றதாகச் சொல்லப்பட்டது.

சுதந்திரக் கட்சியின் போசகர்களாக முன்னாள் ஜனாதிபதிகள் என்ற முறையில் மகிந்த ராஜபக்ஷவும், சந்திரிக்கா குமாரதுங்கவும் நியமிக்கப்பட்டார்கள். மகிந்தவுக்கு சமமாக தன்னையும் நியமித்தமை சந்திரிக்காவுக்கு சீற்றத்தைக் கொடுத்திருந்தது.

சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மத்திய குழுக் கூட் டத்தில் கலந்துகொள்வதற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சந்திரிக்கா குமாரணதுங்கவை அவருடைய இருப்பிடத்திற்குச் சென்று சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

கட்சி யாப்பு புனரமைப்புக் குழுவின் தலைவராகவும் தற்போது சுதந்திரக் கட்சி சந்திரிக்காவை நியமனம் செய்திருக்கின்றது. இதன்மூலம் கட்சியின் முக்கிய பதவி ஒன்றுக்கு சந்திரிக்கா வரலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கும் அமைப்பாளர்களை நியமிக்கின்ற நடவடிக்கைகளுக்கும் என மூவர் அடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரிபால நியமித்திருக்கின்றார். நிமால் சிறிபால டி சில்வா, ஜோன் செனவிரத்ன. சுசில் பிரேமஜயந்த ஆகியோர் இதில் அடங்குகின்றார்கள்.

# நாடாளுமன்ற அமர்வுகளை புறக்கணிக்க துணிந்து விட்டார் ரஜீவ

(கொழும்பு)

தமக்கு உரிய வரிசையில் ஆசனம் வழங்கப்படும் வரையில் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்கு மத்தியில் எனக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. நான் அமைச்சர் அல்ல எனவே அந்த வரிசையில் அமர்வது பொருத்தமாக அமையாது. இந்த விடயம் குறித்து அவைத் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன். மக்களுக்கு சேவையாற்றுவதே தவிர, நாடாளுமன்றில் சென்று அமர்ந்து கொள்வது எனது நோக்கமன்று என அவர் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி இராஜாங்க அமைச்சராக கடமையாற்றி வந்த ரஜீவ விஜேசிங்க, உயர் கல்வி அமைச்சர் கபீர் ஹாசீமுடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து பதவியை ராஜினாமா செய்திருந்தார்.

இதேவேளை, அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வுகளின் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க. ரஜீவ இன்னமும் அமைச்சரே என குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெகத் அசோகா (அமெரிக்கா) கட்டுரையிலிருந்து

**இனவாதம் மற்றும் பழங்குடி அரசியல் தன்மைகளுக்கு அப்பால் சென்று நாம் இலங்கையர் என்கிற ஒரு தேசிய இனம் என்பதை எப்போது அடையப் போகிறோம்? பொதுவான ஒரு மொழி இல்லாமல் இலங்கையன் என்கிற ஒற்றை அடையாளத்தை பெறுவது சாத்தியமாகுமா? முதலில் சிங்கள பௌத்தர்கள் என்கிற பெரும்பான்மை அடையாளம் அவர்களிடம் உள்ளவரை எங்களால் இந்தப் பிரச்சினையை ஒரு போதும் தீர்க்க முடியாது.**




நீங்கள் இலங்கையர் என்கிற ஆழமான உணர்வுகளுடன் இருந்தால் உங்கள் அடையாளம் என்ன? நான் நினைக்கிறேன் பெரும்பாலான இலங்கையர்கள் முதலில் தங்களை அடையாளம் காட்டுவதற்காக தங்கள் இனத்தையோ அல்லது மதத்தையையோ தான் பயன் படுத்துவார்கள் அவர்களது நாட்டை அல்ல.

சிங்களம் என்பது எப்போதாவது எங்களை ஐக்கியப்படுத்தும் ஒரு மொழியாக இருக்குமா, அந்த மொழி சிங்கள இனத்துக்கு மட்டுமே சொந்தமான மொழி இல்லையா? எங்களது சிறுபான்மை இனங்களி லுள்ள பெரும்பான்மை மக்களும்கூட சிங்கள மொழியை பேசினால் சிங்கள மொழிக்கு என்ன நேரும்?

சிங்களம் என்பது, சமூக அடையாளத்தின் அடிப்படை வெளிப்பாடுகளை பிரதிநிதித்துவம் செய்கிறதா? கலாசார மற்றும் இன உறவுகளின் உணர்வுகளை பராமரிக்க சிங்களம் உதவுகிறதா? இலங்கையிலுள்ள பல்வேறு இன மற்றும் மதக் குழுக்களை ஒன்றிணைக்க சிங்கள மொழி உதவி செய்கிறதா?

ஆங்கிலம் எமது வெகுஜனங்களின் பொது மொழியாக இருக்கப் போவதில்லை என்பதை நாம் அறிவோம், ஏனெனில் ஆங்கிலம் என்பது ஓரளவு அணுக முடியாததும் மற்றும் அது உயரடுக்கு அறிவாளிகள் உலகத்துக்கு சொந்தமானதும் ஆகும். ஆங்கிலத்தை திறமையாகப் பேசுபவர்கள் சனத்தொகையில் 10 விகிதமானவர்கள் மட்டுமே, அரசியலமைப்பில் அது ஒரு இணைப்பு மொழி எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் இதர சிறுபான்மையினராகிய நாங்கள் இலங்கையின் ஆரம்ப கால வரலாறு தொட்டு இன்று வரை ஒன்றாக வாழ்ந்து வருகிறோம், இலங்கை தொடர்ந்தும் ஒரு பல்லினச் சமூகமாகவே உள்ளது, இருந்தும் நாங்கள் ஒருவருக்கொருவர் உண்மையானதும் மற்றும் திறமையானதுமான தொடர்புகளை மேற்கொள்ள சிறந்த ஒரு வழியினை இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

மக்கள் பொதுவான ஒரு மொழியில் பேசும்போது தொடர்பாடல்களை மேற்கொள்வது சுலபமாகிறது, பொதுவான ஒரு மொழியினை கண்டுபிடிப்பதில் உள்ள எங்களின் இயலாமை ஒரு சாபக்கேடு வேதாகம காலத்தில் நிகழ்ந்த இயற்கை அழிவுகளின் தன்மையை எட்டக் கூடியது.

இலங்கையின் ஆரம்ப நூற்றாண்டுகளில் சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் இடையே கணிசமானளவு நல்லிணக்கம் இருந்துள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்த நல்லிணக்கத்துக்கு என்ன நேர்ந்தது? அது எப்படி மேலாதிக்கமாக மாற்றம் பெற்றது.

இலங்கையில், தமிழ் அரசியல்வாதிகள் உட்பட பெரும்பாலான தமிழர்கள் சிங்கள மொழியில் மிகவும் கைதேர்ந்தவர்கள் அல்ல.அது எதனால் சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கு எதிரான தீவிர எதிர்ப்பு காரணமாக, அவர்கள் சிங்களம் படிப்பதை மறுத்து வருவதினாலா?

சிங்கள மொழியில் உள்ள பிரச்சினை என்னவென்றால் அதற்கு சொந்தக்காரர்களான இனக் குழவினர் தங்களை சிங்களவர்கள் என்று அடையாளம் காட்டுவதுதான், அமெரிக்காவில் ஆங்கிலம் பேசும் மக்கள் தங்களை ஒரு குறிப்பிட்ட இனக் குழுவினராக அடையாளம் காண்பிப்பதில்லை. அமெரிக்காவில் ஆங்கிலம் நடைமுறையில் உள்ள - சட்டப்படி அல்லாத ஒரு தேசிய மொழி மற்றும் 95 விகிதமானவர்கள் அதை நன்றாகவோ அல்லது மிக நன்றாகவோ பேசுவதாக கூறுகிறார்கள், எனினும் கூட்டாட்சி மட்டத்தில் உத்தியோகபூர்வ தேசிய மொழியாக அது இடம்பெறவில்லை. 50 மாநிலங்களில் 28 மாநிலங்களில் மட்டுமே ஆங்கிலம் உத்தியோக பூர்வ அந்தஸ்தை பெற்றுள்ளது. ஹவாய் மாநிலத்தில் ஹவாயன் மொழியே உத்தியோகபூர்வ மொழியாக உள்ளது இந்த அமெரிக்க அனுபவ நடைமுறையிலிருந்து நாங்கள் என்ன கற்றுக் கொள்ளலாம்.

எங்களது தேசிய அரசியலில், செல்வாக்குள்ள நபர்களின் குறுகிய கண்ணோட்டத்திலான கருத்துக்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் என்பன, அவர்களது சுய அரசியல் ஆதாயங்களுக்காக வகுப்புவாத நோக்கினை அடிப்படையாகக் கொண்டு பரிணாமம் பெற்றிருக்கின்றனவே தவிர தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றின் அடிப்படையில் அல்ல என்று தெரிகிறது.

அதன் விளைவாக சிங்களவர் மத்தியில் - வகுப்பு வாத அடிப்படையில் ஏற்பாடு செய்யும்-தேசியவாதம் என்பது பௌத்த மதத்தை அதன் முந்தைய மகிமையாக மீளத் திணிப்பதற்கான் ஒரு இயக்கமாக வெளிப்பட்டது, மற்றும் ஏனையவை அதனை பின் தொடந்தன, உதாரணம், 1938இல் உருவான பறங்கியர் அரசியல் அமைப்பு, 1939இல் உருவான இலங்கை இந்திய காங்கிரஸ், மற்றும் 1944இல் உருவான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்பன.

**சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் இதர சிறுபான்மையினராகிய நாங்கள் இலங்கையின் ஆரம்ப கால வரலாறு தொட்டு இன்று வரை ஒன்றாக வாழ்ந்து வருகிறோம், இலங்கை தொடர்ந்தும் ஒரு பல்லினச் சமூகமாகவே உள்ளது, இருந்தும் நாங்கள் ஒருவருக்கொருவர் உண்மையானதும் மற்றும் திறமையானதுமான தொடர்புகளை மேற்கொள்ள சிறந்த ஒரு வழியினை இன்னும் கண்டுபிடிக்கவில்லை.**

ஒற்றுமையின் பகிரப்பட்ட மதிப்புகள் பற்றிய கனவு ஒருபோதும் நனவாகாது, விசேடமாக தங்கள் சுய அரசியல் ஆதாயத்துக்காக மதவெறி மற்றும் இணக்கப்பாடின்மை என்பனவற்றுக்கு எண்ணெயூற்றி எரியூட்டும் நபர்களுக்கு மத்தியில்.

விவாதங்கள் மற்றும் இலங்கை மொழிக் கொள்கையை மாற்றும் அவசியம் என்பனவற்றுக்கான வழி பண்டாரநாயக்கா காலத்துக்கு முன்பே ஆரம்பமாகியிருந்தது. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளை உத்தியோகபூர்வ மொழிகளாக அறிவிக்கும். ஒரு கருத்தொருமிப்பு இருந்தது, எனினும் 1956இல் சிங்களம் மட்டும் சட்டம் இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாக இருந்த ஆங்கிலத்தை மாற்றீடு செய்தது, ஆனால் மூன்று பெரிய சிறுபான்மை இனக் குழுக்களின் - இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் - தாய்மொழியாக இருந்த தமிழ் மொழிக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்கத் தவறிவிட்டது, அவர்கள் அனைவரும் சேர்ந்து நாட்டின் சனத்தொகையில் கிட்டத்தட்ட 28 விகிதமாக உள்ளார்கள்.

நீங்கள் இந்த சிங்களம் மட்டும் சட்டத்தின் ஆதரவாளராக இருந்தால், எங்களின் காலனித்துவ எஜமானர்களிடமிருந்து நாங்கள் சுதந்திரம் பெற்று

அதன் அர்த்தம் எங்கள் கவனம் ஒரு இலங்கையராக இருக்கவேண்டும் என்பதாக ஒருபோதும் இருக்கவில்லை என்றே தெரிகிறது, "இலங்கையர்கள்" என்பது எங்களின் உண்மையான ஆழ்ந்த அடையாளமாக இல்லாவிட்டால் தேசிய

விட்டதை காண்பிப்பதற்கு இதுதான் சிறந்த வழி என்று சொல்லக்கூடும், ஆனால் நீங்கள் அதற்கு எதிரானவராக இருந்தால் சிறுபான்மையினர் மீதான தங்கள் ஆதிக்கத்தை உறுதி செய்வதற்கும் மற்றும் அடக்கியாள்வதற்கும் சிங்களவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிதான் இது என்று சொல்லக் கூடும். இந்தச் சட்டம் தமிழர்களின் தனித் தேசிய நாடு என்கிற கோரிக்கையை நியாயப்படுத்துகிறது. அதன் விளைவாக பல தசாப்தங்களாக உள்நாட்டுப் போர் இடம்பெற்றது.

கீழ் மட்டத்திலுள்ள இலங்கையர்களான சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள், ஆங்கிலத்தில் புலமையுள்ள இலங்கையர்கள் இவர்களில் யார் இதனால் ஆதாயம் அடைந்தார்கள்? உயரடுக்கை சேர்ந்த சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் கீழ்மட்ட சிவில் சேவை பணிகளில் பணியாற்றி வந்தார்கள், அதற்கு சரளமான ஆங்கிலப் புலமை அவசியமாக இருந்தது.

இதில் குறிப்பிடுவதற்கு சுவாரஸ்யமானது என்னவென்றால் இந்த உயரடுக்கு கீழ்மட்ட இலங்கையர்களில், கீழ்மட்ட சிங்கள உயரடுக்கினர், பிரித்தானியர்களின் கீழ் தமிழர்கள் தீவின் சனத்தொகையில் தமிழர்களுக்கு உரிய பங்கைவிட அதிகமான பங்கினைப் பெற்று சலுகைகளை அனுபவிக்கிறார்கள் என்கிற ஒரு கருத்தினைக் கொண்டிருந்தார்கள். இதற்காக தமிழர்களைப் பழி சொல்ல முடியுமா?

1956 நாடாளுமன்றத்தேர்தல்களின்போது அவர்களின் முக்கிய தேர்தல் வாக்குறுதியாக "சிங்களம் மட்டும்" என்கிற சுலோகத்தை பிரச்சாரம் செய்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்ததுடன் தேர்தலில் வெற்றியும் பெற்றது. சிங்களம் மட்டும் மசோதாவை ஐ.தே.க. ஆதரவுடன் ஸ்ரீ.ல.சு.க. நிறைவேற்றியது, ஆனால் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் தேசியக் கட்சிகள் என்பன அதை எதிர்த்தன.

கிட்டத்தட்ட தீர்க்கமுடியாத ஒரு பிரச்சினையை நாங்கள் எப்படித் தீர்க்கப் போகிறோம்? இலங்கை ஒரு ஒற்றையாட்சி அமைப்புக்குள், பிளவுபடாத, அனைத்து இலங்கையர்களும் தாங்கள் அதற்கு சொந்தமானவர்கள் என்று உணரும் வகையில் நிலைத்திருப்பதற்கு, அனைத்து இலங்கையர்களும் சமூகம் தங்களுக்கு சேவை செய்கிறது என்று உணரவேண்டும். பிளவு ஏற்படாமல் அத்தகைய சொந்தம் என்கிற உணர்வை எது ஏற்படுத்துகிறது?

முழுப் பொருளுமே எங்களுக்கு சொந்தமாக இல்லாவிட்டால், நாங்கள் அதற்கு உரியவர்கள் அல்ல என்கிற உணர்வு எங்களுக்கு ஏற்படுகிறது மற்றும் எங்களுக்கு எதிராக பாகுபாடு காட்டப்படுகிறது என்று நாங்கள் உணரும்போது நாங்கள் தனியான ஒரு துண்டைக் கேட்கிறோம். ஆனால் அதற்கு ஒரு தீர்வு உள்ளது அது உணர்ச்சியின் அடிப்படையிலானது அல்ல ஆனால் உயிர்வாழ்தல், யதார்த்தம் மற்றும் நடைமுறைத் தன்மை என்பனவற்றின் அடிப்படையிலானது.

நான் இலங்கையில் வாழும் ஒரு தமிழனாகவோ அல்லது முஸ்லிமாகவோ இருந்தால் நான் நிச்சயமாக சிங்கள மொழியில் கைதேர்ந்தவனாக இருப்பேன். அதேபோல அவர்கள் இங்கே அமெரிக்காவில் வசிப்பதை தெரிவு செய்வார்களானால் ஒவ்வொருவரையும் ஆங்கிலம் கற்கும்படி ஊக்கப்படுத்துவேன்.


இலங்கையில் சிங்களத்தை எங்கள் பொதுமொழியாக ஊக்குவிப்பது மிகவும் சர்ச்சைக்கு உரியதும் மற்றும் தீமூட்டும் பிரச்சினையை ஒத்ததும் ஆகும். நீங்கள் சிங்களத்தில் சரளமான புலமையை பெற்றிருந்தால் அதனால் உங்களது தமிழ் அல்லது முஸ்லிம் என்கிற இன அடையாளத்தை நீங்கள் இழந்து விடுவீர்களா?

(13ஆம் பக்கம் பார்க்க)

# பொய்பேசும் விக்கி

# ஒரு பொறுப்பற்ற மனிதர்

## பனியுத்தத்தை ஆரம்பித்தார் ரணில்



(கொழும்பு)

வட மாகாணசபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஓர் பொய்யர் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.


விக்கினேஸ்வரன் பொறுப்புணர்ச்சியற்ற நபர் எனவும், ஓர் பொய்யர் எனவும் ரணில் காரசாரமாக குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த போதும் விக்கினேஸ்வரனை சந்தித்ததில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது ஒரு தடவை விக்கினேஸ்வரனை சந்தித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தாம் சந்திப்பு நடாத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் எந்தவொரு மாவட்டத்தை விட்டும் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையில் தமக்கு உடன்பாடு கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.



விக்கினேஸ்வரனுக்கு தாம் எந்தவொரு வாக்குறுதியையும் அளித்ததில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எதியோப்பியாவில் விசேட தூதரகம்

## விரிவடையும் ஆபிரிக்க உறவு



ஆபிரிக்க வலய நாடுகளுடன் உறவுகளைப் பேணுவதற்காக, எதியோப்பியாவில் இலங்கை விசேட தூதரக மொன்று அமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க கண்டத்தின் அனைத்து நாடுகளுடனும் உறவுகளைப் பேணிக்கொள்ளும் நோக்கில் இந்த தூதரகம் அமைக்கப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. தூதரகத்தை அமைப்பதன் மூலம் 57 ஆபிரிக்க நாடுகளுடன் தொடர்புகளைப் பேண முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

எதியோப்பியாவின் தலைநகர் அடிஸஅபாபாவில் இந்த தூதரகம் அமைககப்பட உள்ளது.

இந்த தூதுரகத்தின் ஊடாக ஆபிரிக்க நாடுகளுடன் நேரடித் தொடர்புகளைப் பேண முடியும் என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி பெரேரா சிங்களப் பத்திரிகை யொன்றுக்குத் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு நாட்டுக்காகவும் தனித் தனியாக தூதரகங்களை அமைப்பதனை விடவும் ஒரே தூதரகத்தை அமைத்து உறவுகளைப் பேணமுடியும் எனவும், இவ்வாறு செய்வதனால் பொருளாதார ரீதியிலும் நன்மை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கண்டிக்கூட்டத்துக்கு சென்றவர்கள் யார்?

## காத்திருக்கிறது ஒழுக்காற்று நடவடிக்கை

கண்டியில் இடம்பெற்ற பேரணியில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மூலம் கட்சியின் பொதுச் செயலாளருக்கு இது குறித்து பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக சில அரசியல் கட்சிகள் இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்தன.

இந்தநிலையில் சுதந்திரக் கட்சியின் தீர்மானத்தை மீறி சில உறுப்பினர்கள் அதில் கலந்துகொண்டுள்ளதாக ராஜித மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய அரசாங்கம் நிச்சயம் உருவாகும்

## மங்கள திட்டவட்டம்



நாட்டில் தேசிய அரசாங்கம் ஒன்று உருவாகுவது உறுதி என வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் உருவாகும், தேசிய அரசாங்கத்தில் இணைந்துகொள்ளுமாறு மக்கள் விடுதலை முன்னணிக்கும் மங்கள சமரவீர அழைப்பு விடுத்துள்ளதாக அரச ஊடகமொன்று அறிவித்துள்ளது.

# ஆகஸ்ட் மாதமே பொதுத்தேர்தல்?

எதிர்வரும் ஆகஸ்ட் மாதமே நாடாளுமன்றத் தேர்தல் நடாத்தப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. தேர்தல் முறைமையில் மாற்றங்களைச் செய்ய காலஅவகாசம் தேவை என்பதனால் எதிர்வரும் ஜூன் மாதத்திலேயே நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என ஆளும், எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.


முன்னதாக ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் பிரதானமாக நான்கு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் தேர்தலை உரிய திகதியில் நடாத்த வேண்டுமென கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற தரப்புக்கள் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதனை விரும்புகின்றன. நாடாளுமன்றத்தேர்தலின் பின்னரே தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

# தேர்தல் சட்ட திருத்தம் ஆணைக்குழு ஒன்று வேண்டும்

## அதில் எமக்கும் ஆசனம் வேண்டும்



தேர்தல் முறைமையில் மாற்றம் செய்வது விடயத்தில் சிறுபான்மை கட்சிகள் ஓரம் கட்டப்படுவதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. தேர்தல் முறைமையில் மாற்றம் தொடரபில் கருத்துக்கள் கோரப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருப்பு வாக்கு முறைமையிலேயே தேர்தல் நடாத்தப்படும் என கருதியதாகவும், அமைச்சரவை தீர்மானம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் ஆணைக்குழு ஒன்றை அமைத்து அனைத்துக் கட்சிகளினதும் நிலைப்பாடுகளை கேட்டறிய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தனக்கு விரும்பியவாறு இவ்வாறு தேர்தல் முறைமையில் மாற்றம் செய்ய முடியாது என குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, தேர்தல் முறைமையில் மாற்றம் செய்வது குறித்து தமக்கும் அறிவிக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் தெரிவித்துள்ளது.

# தேர்தல் வேண்டும் இல்லையேல் வீதியில் இறங்குவோம்



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய புதிய அரசாங்கம் வாக்குறுதியளித்ததைப் போன்று ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தல் நடாத்தப்படவில்லை என்றால் தங்கள் கட்சி போராட்டதில் ஈடுபடவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே. டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

இதற்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கிய சில அரசியல் கட்சிகள் மற்றும் உறுப்பினர்களின் ஆதரவுகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


# தேர்தலுக்கு என்ன அவசரம்?

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அவசரப்படத் தேவையில்லை. மக்கள் நாடாளுமன்றத் தேர்தலைக் கேட்கவில்லை.

கடந்த தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை வைத்து அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதனையே மக்கள் எதிர்பார்க்கின்றனர் என நீதியான சமூகத்தை நோக்கிய தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

100 நாள் என்பது நீதி மன்றத் தீர்ப்பு அல்ல. அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற கால அவகாசம் எடுத்ததற்கு தவறில்லை. மக்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதனையே எதிர்பார்க்கின்றனர்.



கால தாமதமாகுவதற்கு தேர்தல் அல்ல தீர்வு எனவும் தேரர் மேலும் கூறியுள்ளார். இன்றைய சிங்கள தேசிய வார இதழொன்றுக்கு அவர் வழங்கியுள்ள விசேட செவ்வியொன்றிலேயே தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் இந்த ஒற்றுமையான சூழலைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூல விவாதத்தின் போதான உரையில் முருகேசு சந்திரகுமார் (பா.உ)



இந்தப் பாராளுமன்றம் மற்றைய விடயங்களில் ஒற்றுமையாக இருப்பதுபோன்று, இந்த நாட்டில் நீண்ட காலமாகத் தீராத பிரச்சினையாக இருக்கின்ற தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அவர்களது அடிப்படைக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் இந்த ஒற்றுமையான சூழலைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

இன்று தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலத்தினை இந்தச் சபையிலுள்ள எல்லோரும் ஒன்றுகூடி ஒரேகுரலில் ஆதரித்து நிறைவேற்றுவதற்கு முன்வந்திருக்கின்றார்கள். இந்த ஒத்துழைப்பானது எல்லா விடயங்களிலும் இருக்குமானால் நாட்டில் பல பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கண்டுவிடலாம்.

இந்தப் பாராளுமன்றம் மற்றைய விடயங்களில் ஒற்றுமையாக இருப்பதுபோன்று, இந்த நாட்டில் நீண்ட காலமாகத் தீராத பிரச்சினையாக இருக்கின்ற தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அவர்களது அடிப்படைக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் இந்த ஒற்றுமையான சூழலைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று நான் கருதுகின்றேன்.

உண்மையிலே இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுவதனால் பயனடையப்போவது இந்த நாட்டிலே வாழும் ஏழை மக்கள்தான்! ஒவ்வொரு குடும்பமும் அவர்களது மருத்துவ செலவுக்காகப் பாரிய தொகையினை ஒதுக்க வேண்டியிருக்கின்றது. மருத்துவ செலவுகள் அதிகரித்துச் செல்கின்ற நிலைமையில் இந்தச் சட்டமூலம் ஏழை மக்களுக்கு ஆறுதல் அளிக்குமென்று நான் நம்புகின்றேன்.

ஏனெனில், இலவச மருத்துவமானது இன்று வியாபாரமாக்கப்பட்ட நிலைமையைப் பார்க்கின்றோம். பல்தேசியக் கம்பனிகள் இந்த விடயத்தில் அவற்றின் நலன்களுக்காக அதிகாரத்தில் இருப்பவர்களிடம் ஆதிக்கம் செலுத்தி பெருந்தொகையான பணத்தினைக் கொள்ளையடிக்கின்ற நிலைமையினால் இலவச மருத்துவம் கேள்விக்குறியாகியிருக்கின்றது.

அந்த வகையில், பல்தேசியக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தி மக்கள் நியாயமான விலையில் மருந்துகளையும் வேறு மருத்துவ உபகரணங்களையும் பெறக்கூடிய சூழலை ஏற்படுத்துவதற்கு இந்தச் சட்டமூலம் வழிவகுத்திருப்பது பாராட்டக்கூடியது.

இன்று பெரும்பாலான அரச வைத்தியசாலைகள் நவீன உபகரணங்கள், நல்ல நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் மற்றும் வசதிகளுடன் இயங்கினாலும் ஏழை மக்களுக்கு அவற்றின்மூலம் நன்மை கிடைப்பது அரிதாகவே இருக்கின்றது. இன்று தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றால்தான் நோயைக் குணப்படுத்தலாம் என்ற ஒரு வகையான உணர்வு மக்களிடம் காணப்படுகின்றது.

எவ்வளவு ஏழைகளாக இருந்தாலும் அவர்கள் தங்களது நோயை விரைவாகக் குணப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துக்காக அதிக தொகையினை வைத்தியத்துக்காகச் செலவு செய்கின்றார்கள். எனவே, இலவச மருத்துவமானது நியாயமாக மக்களைச் சென்றடைவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இன்னுமொரு முக்கியமான விடயத்தையும் தெரிவிக்க விரும்புகின்றேன். வைத்தியர்களால் வழங்கப்படும் மருந்துச் சிட்டைகளில் – prescription – அதிகமானவை கிறுக்கிய எழுத்துகளைக் கொண்டதாகத்தான் இருக்கின்றன. அவற்றை நோயாளிகள் மாத்திரமல்ல, பல மருந்தகங்களிலே இருக்கின்ற மருந்தாளர்கள் – pharmacists – கூட விளங்கிக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது.

வெளிநாடுகளில் அந்தச் சிட்டை கணனிமயப்படுத்தப்பட்டதாக இருப்பதை நாங்கள் பார்க்கின்றோம். அதாவது, அந்தச் சிட்டையில் மருந்துக்குரிய எல்லா விபரங்களும் தெளிவாக இருக்கும். ஆனால், இங்கே அப்படி அல்ல. ஆகவே, இந்த முறைமையை இலங்கையிலும் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும்.

இன்று பல மருந்தகங்களிலே pharmacist பயிற்சி முடித்துச் சான்றிதழ் பெற்றவர்கள் இருப்பதில்லை. குறிப்பாக, வட பகுதியிலே பல pharmacy களில் pharmacist அனுமதிப்பத்திரம் இல்லாதவர்கள் வேலைசெய்வதை நாங்கள் அவதானிக்கின்றோம். இதனால், தவறான மருந்துகள் நோயாளிகளுக்கு விநியோகிக்கப்படக்கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலைமை அங்கு இருக்கின்றது.

ஆகவே, pharmacist களால் மட்டுந்தான் மருந்து விநியோகம் செய்ய முடியுமென்ற இறுக்கமான சட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

சில இடங்களிலுள்ள pharmacy களுக்குப் போனால், “உங்களுக்கு உள்ளூர் மருந்து வேண்டுமா? அல்லது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்து வேண்டுமா” என்று கேட்கின்றார்கள். உள்ளூர் மருந்து என்றால் விலை குறைவென்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்து என்றால் விலை அதிகம் என்றும் சொல்லப்படுகின்றது. மருந்தில் என்ன வேறுபாடு என்று எனக்குத் தெரியவில்லை. வியாபார நோக்கத்துக்காக அவர்கள் தாங்களே விலைகளை நிர்ணயித்துக்கொள்ளும் நிலைமையைப் பார்க்கின்றோம். இது நியாயமற்றது.

பல அரச மருத்துவமனைகளில் குறிப்பிட்ட சில நோய்களுக்கு மட்டுந்தான் மருந்துகள் இருக்கின்றன. ஏனைய மருந்துகளை வெளியில் வாங்கிப் பயன்படுத்த வேண்டுமென்று நோயாளிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது. இலவச வைத்தியம் என்று சொன்னால், அது விலை அதிகமான மருந்தாக இருந்தாலும், அதுவும் அங்கு வழங்கப்படவேண்டும் அந்த நடைமுறை கொண்டுவரப்படவேண்டும்.

இன்று பல பல்தேசியக் கம்பனிகள் மருந்துகளுக்கான விலைகளை அவைகளே நிர்ணயித்து, பணத்தைக் கொள்ளையடிக்கும் நிலைமையை மாற்றி, அரச இலவச வைத்தியசாலைகளை நோயாளிகள் அதிகம் பயன்படுத்தும் ஒரு நடைமுறையை நம் நாட்டில் கொண்டுவர வேண்டும்.

ஏனென்றால், இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் – வறுமைக் கோட்டின்கீழ் வாழும் அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளில் – இலவச வைத்திய சேவையை நம்பித்தான் அதிகமான மக்கள் இருக்கின்றார்கள். ஆனால், இன்று தனியார் வைத்தியசாலைகள் மிகவும் வேகமாக வளர்ந்துகொண்டு செல்லும் நிலைமையே காணப்படுகின்றது.

சில மருத்துவர்கள் இலாபம் ஈட்டும் நோக்கில், இலவச வைத்தியம் பெறவரும் நோயாளிகளை தனியார் மருத்துவமனைக்கு வருமாறு தூண்டுகின்றார்கள் அங்குதான் நல்ல சிகிச்சை அளிக்கமுடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றார்கள். எல்லா மருத்துவர்களையும் குறைகூற விரும்பவில்லை. சில வைத்தியர்கள் இதன்மூலம் அவர்கள் சம்பாதிக்க முனைகின்றார்கள். இந்த நிலைமைகள் மாற்றப்படவேண்டும்.

அரச மருத்துவமனைகளில் வைத்தியம் செய்யும் வைத்தியர்கள் தனியார் வைத்தியசாலைகளில் சேவையில் ஈடுபடுவதைத் தடுக்க முடியாவிட்டாலும், ஏதாவது கட்டுப்பாடான பொறிமுறையொன்று இருக்கவேண்டும். ஏனென்றால், சில வைத்தியர்கள் அரச மருத்துவமனைகளில் வைத்திய சேவையை வழங்கவேண்டிய நேரங்களில் தனியார் வைத்தியசாலைகளில் பணிபுரிவதை நாங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. இது மிகவும் சவாலான விடயமொன்று எனக்குத் தெரியும். ஆனால், இலவச வைத்தியமானது எல்லா மக்களுக்கும் சென்றடைவதை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பு சுகாதார அமைச்சுக்கு இருக்கின்றது. அதைத் திறம்படச் செய்யவேண்டும்.

# விலங்குகள், பறவைகள் சரணாலயத்துக்கு மன்னாரில் காணிகள் அபகரிப்பு

## நகரசபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு பல்வேறு முட்டுக்கட்டைகள் மற்றும் இடையூறுகள் ஏற்படுவதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட “வன விலங்குகள், பறவைகள் சரணாலயம்” என்ற போர்வையில் மன்னாரில் குடியேற்றப்பகுதிகளில் அபகரிக்கப்பட்டுள்ள காணிகளினால் தற்போதைய அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வங்காலை தொடக்கம் சிறுநாவற்குளம், திருக்கேதீஸ்வரம் போன்ற பகுதிகளிலும், மன்னார் நகரப்பகுதியான பள்ளிமுனை, மன்னார் கோட்டை, சௌத்பார், ஸ்ரேசன் போன்ற பகுதிகளிலும் இவ்வாறு காணிகள் வன விலங்குகள், பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளது.

குறிப்பாக மன்னார் பிரதான பாலத்தடியில் அமைந்துள்ள கோட்டை பகுதிகளிலும் வனவிலங்குகள், பறவைகள் சரணாலயம் எனப் பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டுள்ளன.



எனவே புதிய அரசாங்கம் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நல்லாட்சியை வகுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முதற்கட்டமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள இத்தடைகளை அகற்றி பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவ வேண்டும் என மன்னார் நகர சபை உறுப்பினர் என்ற வகையில் மன்னார் மாவட்ட மக்கள் சார்பாக புதிய அரசை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தென்மராட்சியில் ஸ்கான் கிளினிக்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மருத்துமனையில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஸ்கான் கிளினிக் இடம் பெறவுள்ளது.

எனவே ஸ்கான் செய்து கொள்ளவிரும்புபவர்கள் இன்று கிளினிக்கிற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# 2020 இல் எரிபொருள் இறக்குமதி நிறுத்தம்

(மன்னார்)



2020 ஆம் ஆண்டில் எரிவாயு மற்றும் எரிபொருள் இறக்குமதி நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. புத்தளம் ஆனைமடு பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இதுவரை எண்ணெய் வளமுள்ள இரு இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இதனாலேயே 2020 ஆம் ஆண்டளவில் வெளிநாடுகளிலிருந்து எரிவாயு மற்றும் எரிபொருள் இறக்குமதியை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

# விக்டோரி சுழலில் ஜாலம் தடையின்றி தொடரும் நியூசிலாந்தின் வெற்றிப் பயணம்




(நேபியர்)

விக்டோரியின் சுழல் ஜாலத்தின் மூலம் நியூசிலாந்து அணி ஐந்தாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நியூசிலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றது. ஏ பிரிவுக்கான ஆட்ட மொன்று நேற்று நியூசிலாந்தின் நேபியரில் நடைபெற்றது. இதில் ஆப்கானிஸ்தான், நியூசிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி டானியல் விக்டோரி, போல்ட் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் சமியுல்லா சென்வரி, நஜிபுல்லா ஜட்ரன் ஆகியோர் பொறுப்புடன் ஆடிய அரைச் சதம் விளாசியதுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையையும் அதிகரித்தனர். இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 47.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நஜிபுல்லா ஜட்ரன் 56 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 56, சமியுல்லா சென்வரி 110 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 54, நவ்ரோஸ் மங்கல் 27, ஹமிட் உசைன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டானியல் விக்டோரி நான்கு, போல்ட் மூன்று, அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 187 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 36.1 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் குப்ரில் ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 57, மக்கலம் ஆறு பவுண்டரிகள் அடங்லாக 42, வில்லியம்ஸன் 33, ரெய்லர் 24, எலைற் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஷபூர் ஜட்ரன், மொகமட் நபி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக விக்டோரி தெரிவு செய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி ஐந்தாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

ICC CRICKET WORLD CUP 2015

## இன்றைய ஆட்டம்

**இங்கிலாந்து எதிர் பங்களாதேஷ்**

இடம்: அடிலெய்ட்
நேரம்: காலை 9.00 (இலங்கை நேரம்)

## நாளைய ஆட்டம்

**இந்தியா எதிர் அயர்லாந்து**

இடம்: ஹமில்டன்
நேரம்: காலை 6.30 (இலங்கை நேரம்)

**ஒரே பார்வையில் போட்டி முடிவு**

**ஆப்கானிஸ்தான் 186/10 (47.4)**

| | | | |
|---|---|---|---|
| நஜிபுல்லா ஜட்ரன் | 56 (56) | டானியல் விக்டோரி | 4/18 |
| சமியுல்லா சென்வரி | 54 (110) | போல்ட் | 3/34 |
| நவ்ரோஸ் மங்கல் | 27 (46) | அண்டர்சன் | 2/38 |
| ஹமிட் உசைன் | 16 (21) | மில்ன் | 1/38 |

**நியூசிலாந்து 186/04 (36.1)**

| | | | |
|---|---|---|---|
| குப்ரில் | 57 (76) | ஷபூர் ஜட்ரன் | 1/45 |
| மல்லகம் | 42 (19) | மொகமட் நபி | 1/39 |
| வில்லியம்ஸன் | 33 (45) | | |
| ரெய்லர் | 24 (41) | | |

**6 விக்கெட்டுக்களால் நியூசிலாந்து வெற்றி. ஆட்டநாயகன் : விக்டோரி**

## சங்கா 14ஆயிரம் ஓட்டங்கள்



இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் 14ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த இரண்டாவது வீரர் என்ற சிறப்பைப் பெற்றுள்ள[illegible]

சிட்னியில் நேற்று நடைபெற்ற அவுஸ்ரேலிய அணிக்கெதிரான உலகக் கிண்ண லீக் ஆட்டத்தில் 39 ஓட்டங்களைப் பெற்றவேளையே சங்கக்கார ஒரு நாள் அரங்கில் 14 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். நேற்று வரை 402 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள சங்கக்கார 24 சதம், 93 அரைச் சதங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒரு நாள் அரங்கில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனை இந்தியாவின் சச்சின் வசமுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மைக்ஸ்வெல் சதம்; ஆஸி. அசத்தல் வெற்றி

(சிட்னி)

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 32ஆவது லீக் ஆட்டம் நேற்று அவுஸ்ரேலியாவின் சிட்னியில் நடைபெற்றது. இதில் இலங்கை, அவுஸ்ரேலிய அணிகள் பலப்பரீட்சை நடாத்தின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்குள் முதலிரு விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் கிளார்க் மற்றும் ஸ்ரீபன் ஸ்மித் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டதுடன் ஓட்ட எண்ணிக்கையையும் அதிகரித்தது. இந்த



## ஹட்ரிக் சதம் விளாசி அசத்தினார் சங்கா

ஜோடி 134 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய மைக்ஸ்வெல் ஒரு முனையில் அதிரடியில் அசத்த மறுமுனையில் வட்சன், ஹடின் ஆகியோர் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆடினர். இதன் காரணமாக அவுஸ்ரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கை கிடுகிடுவென உயர்ந்தது.

தொடர்ந்து ஒரு முனையில் அதிரடியில் தூள் கிளப்பிய மைக்ஸ்வெல் இலங்கை அணியின் பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்துடன் பவுண்டரிகள், சிக்ஸர்களாக விளாசி, சதமடித்து அசத்தினார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 376 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மைக்ஸ்வெல் 53 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், பத்து பவுண்டரிகள் அடங்கலாக 102, ஸ்ரீபன் ஸ்மித் 88 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 72, மைக்கல் கிளார்க் 68 பந்துகளை எதிர் கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 68, வட்சன் 41 பந்துகளை எதிர் கொண்டு இரண்டு சிக்ஸர்




கள், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 67, ஹடின் 25, ஆரோன் பிஞ்ச் 24 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் லசித் மலிங்க, திசர பெரேர ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 377 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி முதல் விக்கெட்டை ஐந்து ஓட்டங்களைப் பெற்றவேளை பறிகொடுத்தது. இந்நிலையில் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த குமார் சங்கக்கார டில்சானுடன் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். இதில் ஜோன்சன் வீசிய ஆறாவது ஓவரில் டில்சான் தொடர்ந்து ஆறு பவுண்டரிகள் விளாசி அசத்தினார். சிறப்பாக ஓட்டங்களைக் குவித்து வந்த இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 130 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை (டில்சான்) பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய மஹேல சங்கக்காரவுக்கு ஒத்துழைப்பு அளிக்கும் வகையில் ஆடினார். மறுமுனையில் ஹட்ரிச் சதம் அடித்து அசத்திய சங்கக்கார, உலகக் கிண்ண வரலாற்றில் அதிக சதம் (6) விளாசிய வீரர் என்ற சிறப்பை சச்சின் டெண்டுல்கருடன் பகிர்ந்துகொண்டார். இதனைத் தொடர்ந்து சங்கக்கார, மஹேல ஆகியோரின் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டன. ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் மத்தியூஸ், சண்டிமல் ஜோடி பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக அதிகரித்தது. வேகமாக அரைச் சதம் அடித்த சண்டிமல் தசைப்பிடிப்புக் காரணமாக களத்தை விட்டு வெளியேறினார். தொடர்ந்து மத்தியூஸின் விக்கெட் சரிக்கப்பட்டதுடன் ஆஸி. அணியின் ஆதிக்கம் அதிகரித்தது. இறுதியில் இலங்கை அணி 00.0 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 000 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சங்கக்கார 107 பந்துகளை எதிர்கொண்டு 11 பவுண்டரிகள் அடங்கலாக 104, டில்சான் எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 62, சண்டிமல் 24 பந்துகளை எதிர்கொண்டு எட்டு பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 52, மத்தியூஸ் 35, மஹேல ஜெயவர்த்தன 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் போல்க்னர் மூன்று, ஜோன்சன், ஸ்ரார்க் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக மைக்ஸ்வெல் தெரிவு செய்யப்பட்டார்.

**ஒரே பார்வையில் போட்டி முடிவு**

**அவுஸ்ரேலியா 376/09 (50)**

| | | | |
|---|---|---|---|
| மைக்ஸ்வெல் | 102 (53) | லசித் மலிங்க | 2/59 |
| ஸ்ரீபன் ஸ்மித் | 72 (88) | திசர பெரேர | 2/87 |
| மைக்கல் கிளார்க் | 68 (68) | ரி.எம்.டில்சான் | 1/33 |
| வட்சன் | 67 (41) | மத்தியூஸ் | 1/59 |

**இலங்கை 312/00 (46.2)**

| | | | |
|---|---|---|---|
| குமார் சங்கக்கார | 104 (107) | போல்க்னர் | 3/48 |
| டில்சான் | 62 (60) | ஜோன்சன் | 2/62 |
| சண்டிமல் | 52 (24) | மைக்கல் ஸ்ரார்க் | 2/20 |
| மத்தியூஸ் | 35 (31) | வட்சன் | 1/71 |

**64 ஓட்டங்களால் அவுஸ்ரேலியா வெற்றி. ஆட்டநாயகன் : மைக்ஸ்வெல்**

# பிரதீபன் அசத்தல்; வென்றது மானிப்பாய் இந்து



(மானிப்பாய்)

பிரதீபனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும சாவகச்சேரி றிபேக் தாரகை அணிகளுக்கிடையிலான 30 ஓவர்கள் கொண்ட சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டி ஒன்று கடந்த ஐந்தாம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய றிபேக் தாரகை அணி 29.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தசிந்தன் 58, மார்க்சிங் 33, சங்கர் 28 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 184 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 26. 4 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சிறப்பான முறையில் ஆடிய பிரதீபன் 68 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தார்.

இதேவேளை, யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவுக்காக விளையாடிய 50 ஓவர் போட்டிகளை தொடர்ந்து றிபேக் தாரகை விளையாட்டுக் கழகம் களமிறங்கும் முதலாவது 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். அணிகள் வெளியேற்றம்

(கட்டுநாயக்க)

ஜனாதிபதி தங்கக் கிண்ண தேசிய மட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்றுடன் யாழ். மாவட்ட அணிகள் வெளியேற்றப்பட்டுள்ளன.

ஜனாதிபதி தங்கக் கிண்ண தேசிய மட்ட கரப்பந்தாட்டப் போட்டி கட்டுநாயக்க சிதுவா பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒவ்வொரு அணிகள் பங்கு கொண்டன. ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ். மாவட்ட அணிகள் இரண்டாவது சுற்றுடன் வெளியேறியுள்ளது.

பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி மாத்தளை அணியுடன் முதல் போட்டியில் மோதியது. இப்போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கேகாலை அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் கேகாலை அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது. இதன் மூலம் யாழ். மாவட்ட பெண்கள் அணி வெளியேற்றப்பட்டது.

ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி முதல் போட்டியில் நுவரெலியா அணியை எதிர்கொண்டது. இதில் இரு அணிகளும் வெற்றிக்காக இறுதி வரை போராடின. சிறப்பான முறையில் செயற்பட்ட நுவரெலியா மாவட்ட அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது. இதன் மூலம் யாழ். மாவட்ட ஆண்கள் அணி முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டது. (93)

## சிவசிறி அணி சம்பியன்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் சிவசிறி அணியும் றொக் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சிவசிறி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் சாந்தவிநாயகர் அணியும் இளவாலை ஹென்றீஸ் அணியும் மோதின. இதில் சாந்த விநாயகர் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

## கோட்ட மட்ட வலைப்பந்தாட்டம் தொடரும் யூனியன் கல்லூரியின் ஆதிக்கம்

(தெல்லிப்பளை)


தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி மூன்று பிரிவுகளில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகள் 15, 17, 19 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மகாஜனக் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 20 - 10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் மகாஜனக் கல்லூரி அணியும் யூனியன் கல்லூரி அணியும் மோதின. இதில் யூனியன் கல்லூரி அணி 29-03 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் மகாஜனக் கல்லூரி அணியும் யூனியன் கல்லூரி அணியும் மோதின. இப்போட்டியிலும் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யூனியன் கல்லூரி அணி 24-02 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. கடந்த பல வருடங்களாக கோட்ட மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி முதலிடத்தை தக்கவைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

## பாடசாலை மட்ட இல்ல மெய்வல்லுநர்





கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை (137)





காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம் (50)

# ஸ்டீபன் ஹொக்கிங் நூலில்......

பிரபஞ்சம் என்பது எங்கிருந்து வந்தது? எப்படி, ஏன் தொடங்கியது? அது ஒரு முடிவுக்கு வருமா? எனில் எவ்வாறு முடிவு என்பது நிகழும்? என்ற கேள்விகளை முன்வைத்து ஸ்டீபன் ஹொக்கிங் எழுதிய மிகப் பிரபலமான "A Brief History of Time" நூலில் அவர் ஐன்ஸ்டீன், ஐசக் நியூட்டன், கலிலியோ ஆகியோர் பற்றி எழுதியுள்ளவை:

★ ஐன்ஸ்டீன் வாழ்க்கை என்பது அவரே சொன்னது போல் சம நிலைக்கும் அரசியலுக்கும் இடையில் பிரிக்கப்பட்டது. அணுகுண்டு அரசியலுக்கும் அவருக்குமான தொடர்பு எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஐன்ஸ்டீனுடைய ஆரம்ப அரசியல் நடவடிக்கை முதல் உலகப்போர் சமயத்தில் அவர் பெர்லினில் பேராசிரியராய் இருந்த போதே துவங்கியது. மனித உயிர் விரயமாவதைக் கண்டு வெறுப்புற்று உலகப் போருக்கெதிரான அவருடைய ஒத்துழையாமை போராட்டம்.

அணுகுண்டு என்பதற்கடுத்து அவருடைய இரண்டாவது கவனம் ஒரு யூதர் என்றவகையில் அவருடைய யூத ஆதரவு, யூதர்களுக்கு தனி நாடு வலியுறுத்தியவர். அவர் யூதராக இருந்தாலும் பைபிள் காட்டிய கடவுளுக்கு எதிரான கருத்துடையவர். யூத வெறுப்புக்கெதிரான அவருடைய கோட்பாடுகள் அவரை முழு யூத ஆதரவாளராக மாற்றியது.

அவருடைய கோட்பாடுகள் கடும் தாக்குதலுக்குள்ளாயின. ஐன்ஸ்டீனுக்கு எதிரான அமைப்பு கூட நிறுவப்பட்டது. ஐன்ஸ்டீனை கொலை செய்ய மற்றவர்களைத் தூண்டியதாக



ஒரு ஆள் மீது குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கவும் பட்டது. தண்டம் எவ்வளவு என்றால் ஆறு டொலர்!

ஐன்ஸ்டீன் உணர்ச்சிவசப்படாமல் பக்குவமாக எதிர்ப்புகளை எதிர்கொண்டார். "100 Authors against Einstein" - இப்படி ஒரு புத்தகம் வெளி வந்த போது அவர் சொன்னார்: "If I were wrong, then one would have been enough!"

அவருடைய யூத ஆதரவு நிலை காரணமாக 1952ஆம் ஆண்டு இஸ்ரேல் ஜனாதிபதி பதவி அவரைத் தேடி வந்த போது ஐன்ஸ்டீன் நிராகரித்தார். அரசியல் தனக்கு ஒத்து வராது என்றார். ஆனால் உண்மைக்காரணம் அவரே முன்னர் சொன்னது தான். "Equations are more important to me, because politics is for the present, but an equation is something for eternity."

★★ சேர். ஐசக் நியூட்டன் சுவாரசியமான ஒரு விஞ்ஞானி. அவருடைய Principia Mathematica தான் பௌதி கவியலை ஆக்கிரமித்த முக்கிய தியரி. லண்டன் றோயல் சொசைட்டியின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர். The first scientist ever to be knighted.

நியூட்டன் அவ்வளவு சிலாக்கியமான சந்தோஷகரமான மனிதப்பண்புகள் பெற்றவரல்ல.

தனது நோக்கத்திற்கு எதிரான "இல்லை" என்ற பதிலை அவர் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்.

ஜோன் ஃபளம்ஸ்டீட் என்ற சக விஞ்ஞானியை அவர் படுத்திய பாடு... மற்றும் calculus theory விஷயத்தில் மற்றொரு சகாவான கோட்ஃப்ரைட் லீப்னிஸ் மீது நியூட்டன் காட்டிய வன்மமும், துவேசமும் அவர் மீதான நீங்காத கறை.

நியூட்டனை காப்பாற்ற பிறரால் எழுதப்பட்டதாக பிரசுரிக்கப்பட்ட ஆதரவு கட்டுரைகள் அனைத்தையும் எழுதியவர் நியூட்டனே தான்!

லீப்னிஸ் மனமுடைந்து இறந்த போது நியூட்டனுக்கு வக்கிரமான திருப்தி! கேம்பிரிட்ஜை விட்டு விலகிய பின் றோயல் மின்ட் காப்பாளர் பதவியை தன் நேர்மையற்ற நடவடிக்கைக்கும் பிறர் மீதான கடும் அவதூறுக்கும் பயன்படுத்தியவர். இந்தப் பதவி மூலம் பலரை தூக்கு மரத்திற்கு அனுப்பியவர்.

★★★ உலகம் எப்படி செயல்படுகிறது என்பதை உலகின் மீதான உன்னிப்பான கவனம் மூலம் புரிந்து கொள்ளமுடியும் என நம்பியவர் கலிலியோ.

சூரியனை மற்ற கிரகங்கள் சுற்றுகின்றன என்ற கோப்பர்னிகஸ் கோட்பாட்டை இலத்தீனில் எழுதியவர். கடவுள், மத நம்பி
கலிலியோவிற்கு வாழ்வு சவா
கலிலியோ வாதிட்டார் : "பை
விஞ்ஞான கோட்பாடுகள்
பற்றி சொல்வதற்கானது
அல்லவே அல்ல."

ஆனால் 1616இல் கத்தோலிக்க தேவாலயம் கோப்பர்னிகஸ் கோட்பாடு தப்பானது, தவறானது என்று தடை விதித்து நிராகரித்து விட்டது.

1623இல் கலிலியோவின் நீண்ட நாள் நண்பர் ஒருவர் போப் ஆண்டவர் ஆன போது கோப்பர்னிகஸ் கோட்பாட்டிற்கு எதிரான தடையை நீக்க கலிலியோ முயற்சித்தார். ஆனால் முடியவேயில்லை. ஆனால் அரிஸ்டோட்லியன் - கோப்பர்னிகன் தியரிகள் பற்றி ஒரு புத்தகம் எழுத வாட்டிகனின் அனுமதியை கலிலியோ வாங்கி விட்டார்.
1632இல் பிரசுரமான அந்தப்
concerning the two chief worl
யாக ஐரோப்பாவின் மகத்தா
தத்துவ நூலாக பாராட்டப்பட்
புத்தகம் வெளி[illegible] அனுமதி
தந்ததற்கு வரு[illegible] உடனே
வீட்டுக்காவலில் வைத்து கோ
கோட்பாட்டை கை விடும்படி

கலிலியோ ஒரு விசுவாச
கத்தோலிக்கராகவும் இருந்தா
விஞ்ஞான சுதந்திரம் மீதும்
வைத்திருந்தார். அவர் வீட்டு
நிலையில் அவருடைய மற்
ஒல்லாந்துக்கு கடத்தப்பட்டு
செய்யப்பட்டது.

"Two New Sciences" என
நவீன பௌதிக

# காந்தியின் தேவை முடிந்தது!



நான் மகாத்மா காந்தியின் அந்தரங்கச் செயலாளராக 1944 முதல் அவரது இறுதிக் காலமான 1948 வரை பணியாற்றி இருக்கிறேன்.

திங்கள்கிழமைகளில் அவருக்கு மௌன விரதம். அன்று எனக்கு டிக்டேஷன் கிடையாது. அவரே கைப்பட எழுத வேண்டிய கடிதங்களை அன்று எழுதுவார்.

வெளியூர் சுற்றுப்பயணம் போகும்போது ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்திலும் மற்ற இடங்களிலும் காந்திஜி நடத்தி வந்த "ஹரிஜன்" சேவைக்காக நிதி திரட்டுவார். அப்போது ஒரு சாக்குப் பையை வைத்துக் கொண்டு நான் நிற்பேன். பொதுமக்கள் பணத்தை அதில் போடுவார்கள். பை நிரம்பியதும் அதை அப்படியே மூட்டை கட்டிக்கொண்டு, காந்திஜி தங்கும் இடத்திற்கு எடுத்துச் செல்வோம். அங்கு வங்கி அதிகாரிகள் வருவார்கள். அவர்களிடம் பண மூட்டையை அப்படியே தூக்கிக் கொடுத்து விடுவோம். எண்ணுவதற்கெல்லாம் நேரம் கிடையாது. வங்கி அதிகாரிகள் வங்கியில் கணக்கு வைத்துக் கொண்டு இவ்வளவு தொகை என்று விபரம் சொல்வார்கள்.

இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு இரண்டு நாள்கள் முன்னதாக கல்கத்தாவில் பெலியாகட்டா என்ற இடத்தில் தங்கியிருந்தோம். அங்கே ஓரிடத்தில் முஸ்லிம்களை இந்துக்கள் வெட்டிக் கொல்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அந்த இடத்தில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக காந்திஜி அங்கு சென்று தங்கினார். இருந்தாலும் காந்திஜி இருக்கும்போதே அந்த வீட்டைக் கல்லால் அடித்தார்கள். அதில் சில கற்கள் காந்தியின் மேலும் பட்டன. சுதந்திரம் வாங்கும் அன்று "நீங்கள் டெல்லிக்கு வாருங்கள்" என்று நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் போன்ற தலைவர்கள் காந்தியை அழைத்தார்கள். "எனக்கு இங்கே வேலையிருக்கிறது. கொண்டாட்டங்கள், விழாக்களில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை!" என்று சொல்லிவிட்டு அவர் கல்கத்தாவிலேயே தங்கி விட்டார். எல்லா நாளையும் போலவே இந்தியாவின் சுதந்திர நாள் அவருக்குச் சாதாரணமாய்க் கழிந்தது.

ஆனால் என்னுடைய கருத்து என்னவென்றால் சுதந்திரத்திற்கு முன்பு அவருக்கு இருந்த முக்கியத்துவத்தின் அளவு இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு அவருக்குத் தரப்படவில்லை. His usefulness came to an end with the departure of the British. ஆங்கிலேய அரசு வெளியேறியதும் காந்திஜியின் தேவை முடிந்து போனதாகவே கருதப்பட்டது.

**(காந்திஜியின் அந்தரங்கச் செயலாளர் கல்யாணம் தந்த பேட்டியிலிருந்து.)**

# சமூகப்பணியின் சமத்துவ எழுச்சி

**- கோவை நந்தன் -**

இம்மாதம் இடம் பெறவுள்ள பிரான்ஸ் நாட்டின் பிராந்திய நிர்வாக அமைப்புகளுக்கான தேர்தலில் (Élection Départementale en France) களம் இறங்கியுள்ளார் பொதுச் சேவையில் நடுநிலையுடன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள தமிழ் சமூகத்தின் இளம் தலைமுறைப் பெண் சேர்ஜியா மகேந்திரன். பிரான்ஸின் நிர்வாக பிரிவுகளில் முக்கியமானதும், பல்லின மக்களும் பரவலாக அன்புடனும்-அமைதியுடனும் வாழும் பிரதேசமும், பொன்த்ஆஸ் (Pontoise) நகரை தலைமையிடமாகவும், கொண்டுள்ள பிரான்ஸின் 95ஆவது பிரிவான "வல்டுவாஸ்" (Departement du val D'oise) பிராந்திய அமைப்புக்கான தேர்தலிலேயே இவர் போட்டியிடுகிறார்.




பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோஸி (Nicolas Sarkozy) சார்ந்துள்ள முக்கிய வலதுசாரிக் கட்சியான UMP (Union Pour Un Mouvement Populaire) சார்பில் இத்தேர்தலில் போட்டியிடும் சேர்ஜியா மகேந்திரன், ஏற்கனவே இந்தப்பிராந்திய அலகினுள் அமைந்துள்ள கார்ஜ் லி கொனெஸ் (Garges les Gonesse) கிராம சபைத் தேர்தலில் கடந்த ஆண்டு போட்டியிட்டு வெற்றி பெற்றதுடன், அங்கே துணை மேயராகவும் சேவையாற்றிக் கொண்டிருப்பவர்.

101. மாவட்டங்களையும் (Departement), அவற்றினுள் பல உபபிரிவுகளையும் (Canton), கொண்டுள்ள பிரான்ஸின் நிர்வாக அலகுகளின், ஒவ்வொரு உபபிரிவிலிருந்தும் ஒரு பெண்ணும் ஒரு ஆணும் மக்கள் பிரதிநிதிகளாக (Conseils Departementaux) தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பது, பிரான்ஸின் தற்போதைய பிரான்சுவா ஹொலண்ட் (FranTois Hollande) அவர்களின் சோசலிசக் கட்சி அரசாங்கம் நிறை
நல்லபல சட்ட மூலங்கள்
ஆண்களுக்கு இணையா
அதிகாரத்[illegible] இருக்க
அவர்கள் மக்களால் தெரிவுசெய
இருக்க வேண்டும் என்கின்ற சம
அடிப்படையிலான இந்த மாற்றத்
முதலாவது தேர்தல் இது என்பது

பிரான்ஸின் 95வது நிர்வாக
அங்கத்தவர்களுக்கான தேர்தலி
யின் நகரபிதாவான(Maire), மி
Aumas) அவர்களுடன் இணைந்
நிதியாக போட்டியிடுகிறார் சேர்

பதவி என்பது தமக்கான, த
என நம்பிக்கொண்டிருக்கும் நம்
வாதத்தை தகர்த்து, உளுத்துப்
களை, இன்றும் பின்பற்றிக் கெ
சமூகத்தினர் மத்தியில் சமத்துவ
சார்பு நிலை எதுவுமற்ற ஒரு
அடையாளப்படுத்திவரும் சேர்ஜி
சேவைகள் Garges les Gonesse
வளர வேண்டும் என்பதே மாற்
ஆர்வலர்களினதும், யதார்த்த
விருப்பாக இருக்கும்.

டவுள், மத நம்பிக்கை மிகுந்த
ருகு வாழ்வு சவாலாகி விட்டது.
ாதிட்டார் : "பைபிள் என்பது
காட்பாடுகள்
தற்கானது
ல்லை."
616இல்

ல்
ப்பானது,
ன்று தடை
கரித்து

கலிலி-
ட்ட நாள்
ர் போப்
ன
பர்னிகஸ்
கு
டயை
யா
ஆனால்
லை.
ஸ்

தியரிகள்
த்தகம்
கனின்
கலிலியோ
ார்.

ரமான அந்தப் புத்தகம் "Dialogue
e two chief world systems" உடனடி
பாவின் மகத்தான இலக்கிய,
க பாராட்டப்பட்டது. போப் இந்தப்
அனுமதி
உடனே லிலியோவை
ல் வைத்து கோப்பர்னிகஸ்
கை விடும்படி நிர்ப்பந்தித்தார்.
ஒரு விசுவாசமான
ாகவும் இருந்தார். அதே நேரம்
தந்திரம் மீதும் முழு நம்பிக்கை
ர். அவர் வீட்டுக்காவலில் இருந்த
வருடைய மற்றொரு நூல்
கடத்தப்பட்டு பிரசுரமாக ஏற்பாடு
து.

**w Sciences" என்ற அந்த நூல் தான்**
**நவீன பௌதிகத்தின் ஆதியாகமம்!**
**- R.P.ராஜநாயஹம்-**

சாங்கம் நிறைவேற்றிய புதிய,
சட்ட மூலங்களில் ஒன்றாகும்.
க்கு இணையாக பெண்களும்
இருக்க ண்டும், குறிப்பாக
ல் தெரிவுசெய்யப்பட்டவர்களாக
என்கின்ற சமத்துவ சிந்தனா
இந்த மாற்றத்துடன் நடைபெறும்
ல் இது என்பது குறிப்பிடத்தக்கது.




வது நிர்வாக அலகின், இரண்டு
கான தேர்தலில், Arnouville பகுதி
ன(Maire), மிசேல் அ.மா (Michel
ருடன் இணைந்து, பெண் பிரதி
விடுகிறார் சேர்ஜியா.
தமக்கான, தம்சார்புக்கான பெருமை
ண்டிருக்கும் நம் யாழ்ப்பாண சிந்தனா
து, உளுத்துப்போன பாரம்பரியங்
பின்பற்றிக் கொண்டிருக்கும் நம்
தியில் சமத்துவத்தை நிலைநிறுத்தி,
வுமற்ற ஒரு சேவகியாக, தன்னை
திவரும் சேர்ஜியா மகேந்திரனின்
es les Gonesse ஐயும் தாண்டி
என்பதே மாற்றம் சார் சமூக
ம், யதார்த்த வாதிகளினதும்
கும்.

**வாறார் வாறார் மோடி வாறார்**
**வாறா வாறா சுஸ்மா வாறா**
**டண்டணக்க டண்**
**டண்டணக்க டண்**

**- ம. கிறிஸ்தோபர் -**

# புதுக்கூத்து



வாறார் வாறார் மோடி வாறார்
வாறா வாறா சுஸ்மா வாறா

வாறார் வாறார் மோடி வாறார்
வாறா வாறா சுஸ்மா வாறா

டண்டணக்க டண்
டண்டணக்க டண்
மோடிக்கு டண்டணக்க
சுஸ்மாவுக்கும் டண்டணக்க

யாழ்ப்பாணத்துக்கு நீங்க வந்தா
உங்களுக்கும் நல்லது
எங்களுக்கும் நல்லது.

டண்டணக்க டண்
டண்டணக்க டண்

பாலப்பம் வேணுமா?
இடியப்பம் வேணுமா?

இடியப்பம் என்றால்
நல்ல சம்பல் இருக்கு.
தோதாகச் சொதியும் இருக்கு
சூடை மீனில பொரியலும் இருக்கு.
ஓ... சூடை மீன் நீங்க சாப்பிடறதில்லையோ..
அப்படியென்றால், நல்ல சம்பல் தரலாம்.

கமரூன் வந்தார்.
கைகுலுக்கினார்.
அகதி முகாமுக்குப் போனார்.
ஆயிரம் வார்த்தைகள் சொன்னார்.

அதைப்போல நீங்களும்
யாழ்ப்பாணம் வாங்கோ...
வாக்குறுதி நாலு தாங்கோ...

புதிசா ஒண்டையும் சொல்லத்தேவையில்லை.
பழைய ரேப்பை மட்டும் போட்டாக் காணும்.
நாங்கள் அதை மாத்தாமல் அப்பிடியே வைச்சிருக்கிறம்.
எல்லாமே பழசுதான்.
பழசுதான் பழகினது.

டண்டணக்க டண்
டண்டணக்க டண்


நல்லாய்க் கையைக் குலுக்குங்கோ
கிட்ட வாங்கோ கிட்ட வாங்கோ
எங்கட ஆக்கள் எங்க...?
ஓடியாங்கோ ஓடியாங்கோ...

மோடியோட கைகுடுங்கோ
கிட்ட நிண்டு படமெடுங்கோ...
சுஸ்மாவோட பக்கத்தில நில்லுங்கோ

டண்டணக்க டண்
டண்டணக்க டண்

அடுத்த நாள் பேப்பரில
"அரசியல் தீர்வுக்கு ஆக்கபூர்வமான பேச்சு
இந்தியா அழுத்தம்
இலங்கைக்கு எச்சரிக்கை"
எண்டு மட்டும் வந்தால் போதும்
நாலு நாள் சீவியம் போகும்

டண்டணக்க டண்
டண்டணக்க டண்



# துரத்தி விடும் தமிழரசுக் கட்சியும் தொத்திக்கொண்டு ஏறும் சுரேஷும்

## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

தமிழரசுக் கட்சியின்ரை மத்திய குழுக் கூட்டம் நடந்து முடிஞ்சிருக்குது. அந்தக் கூட்டத்திலை பிரதானமாய் பேசப்பட்ட விசியம் கொடும்பாவி எரிச்ச விசயந்தான். அதிலை ஈடுபட்ட தமிழரசுக் கட்சியின்ரை மகளிர் அணித் தலைவி அனந்தி, கூட்டமைப்பின்ரை பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தொடர்பிலை கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்குது.

அதிலை உருப்படியான தீர்மானம் ஏதும் எடுக்கப்படேல்லை எண்டாலும் கண்டனத் தீர்மானம் எடுக்கிறதுக்கும், அதுக்காக விவாதிக்கிறதுக்கும் நேரஞ் செலவழிக்கப்பட்டிருக்குது. இது முக்கியமான விசியம் பாருங்கோ!

கூட்டமைப்பு எண்டது தானாக ஒண்டு சேர்ந்த அமைப்பில்லை. அது புலிகளாலை ஆயுதப் போராட்டத்தை உடனை நிறுத்த முடியாது எண்டதாலை ஒரு ஜனநாயக மாற்றாய் உருவாக்கப்பட்ட ஒண்டுதான்.

இந்தக் கூட்டமைப்பிலை ஆர் இருக்கலாம்? ஆர் இருக்கக் கூடாது? எண்டதுகளிலையே கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டிருந்தன. குறிப்பாக சுரேசை உள்ளுக்கு எடுக்கிறதிலையே பலமான எதிர்ப்பு இருந்தது. புளொட், ஆனந்தசங்கரியிரை தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றை இணைக்கிறதிலையும் இழுபறி நிலவினது.

அன்ரன் பாலசிங்கத்தின்ரை குத்தல் குடைசல் கதையளுக்கு ஆனந்தசங்கரியும் மறுத்தான் விட்டு, கடைசியிலை வெளியிலை நிக்க வேண்டி வந்தது. பிறகுதான் இந்த இரண்டு கட்சியளும் கூட்டமைப்பிலை இணைஞ்சவை.

எனவே, இந்த இணைவுத் தேவைப்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாய் குறையத் தொடங்கீட்டுது. வேண்டாப் பெண்டாட்டி கை பட்டால் குற்றம். கால் பட்டால் குற்றம் எண்ட நிலையிலையே இப்ப அனந்தியும் சுரேசும் இருக்கினை.

"கொடும்பாவி எரிப்புக்கும் எனக்கும் சம்பந்தமேயில்லை. நான் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த நேரத்திலை(ஆரோடையோ ஏதோ விவாதிச்சுக் கொண்டிருந்தாராம்) இது நடந்திட்டுது. கடவுளே! காலம் என்னை அங்கை கொண்டு போய் விட்டிட்டுது" எண்டு இப்ப சுரேஸ் புலம்புகிறார்.

"சம்பந்தனும், சுமந்திரனும் தமிழ் மக்களை மோடயா என நினைச்சிட்டினையோ?" எண்டு வானொலியிலை வொய்ஸ் கட்டாய் குடுத்தீதுக்கும் சிலவேளை ரேடியோக்காரர் குரல் மாத்தித் திணிச்சது எண்டு பிளேட்டை மாத்திச் சொல்லுவாரோ?

இப்ப பெரியாளாய் காட்ட வெளிக்கிட்டு மூக்குடைஞ்சு நிக்கிறார் சுரேஸ். பழைய சூத்திரத்திலை கணக்குப் பார்த்தால் ஆனந்தசங்கரி அவுட். பொன்னம்பலத்தாற்றை பெடியனும், அவற்றை படை பரிவாரங்களும் அவுட்.

மன்னாரிலை மட்டும் ரெலோவை மட்டுப்படுத்தலாம். வவுனியாவோடை நில்லுங்கோ எண்டு சித்தார்த்தனுக்கு அறிவுரை கூறப்பட்டிருக்குது. சுரேசையும் அவுட்டாக்கினால் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலை தமிழரசுக் கட்சியே தனிச்சுக் கோலோச்சலாம்.

யாழ்ப்பாணக் கோட்டையைப் பலப்படுத்தினால் அடுத்த கட்டங்களிலை இலகுவாய் வன்னிக் கோட்டையைக் கைப்பற்றிறது கஷ்டமில்லை. அப்ப தம்பி சுரேஷ் நடையைக் கட்டத் தயாராகுங்கோ!

உங்கள் எல்லாரையும் ஒரு மூலையிலை ஒதுக்கிப் போட்டு தமிழரசுக் கட்சி எப்பவோ தனிச்சு நடந்திருக்கும். ஆனால் அது பைனான்சியல் பிரச்சினையாய் மாறிவிடும். அடி - மடியிலை கை வைக்கிற வேலை. இந்தப் பலப் பரீட்சையிலை தமிழரசுக் கட்சி இப்ப இறங்கேலாது.

எண்ட படியாலை கொஞ்ச நாளைக்குப் பிரச்சினையில்லை. சரியான காரணங்கள் முன்வச்சு உங்களை வெளியிலை தள்ளுகிற வரைக்கும் நீங்களும் சம்மந்தாசம்மந்தமில்லாமல் கதைச்சுக் காலத்தை ஓட்டலாம்.

இந்த இடத்திலை இன்னொரு விசியமும் இருக்குது. தமிழரசுக்கு மாற்றான ஒரு அரசியல் தலைமை தேவை போலை கிடக்குது. அந்தத் தலைமை எண்டது கூட ஒரு கூட்டமைப்பாய், கூட்டுக் கட்சிகளின்ரை இணைவாலைதான் சாத்தியமாகும்.

அதைப் பற்றி அமைச்சர் டக்ளஸ் கூட பிரஸ்தாபிச்சிருக்கிறார். தமிழரசுக் கட்சியாலை வெளிவீசப்படப் போற கட்சியள் ஒரு நேர்கோட்டிலை சந்திக்கிறது பற்றிச் சிந்திக்கிறது நல்லது. வாய்ச் சவடால் அரசியலுக்கு அப்பாலை பாவப்பட்ட சனங்களுக்கு ஏதாச்சும் செய்யலாமல்லே!

எல்லாரும் பாத்துக்குங்க...
நானும் கூட்டமைப்பிலதான்..
நானும் கூட்டமைப்பிலதான்.



## கலட்டியில் கைகலப்பு; இளைஞர் படுகாயம்

வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதில் அண்ணாசிலையடி கரணவாயைச் சேர்ந்த தர்மலிங்கம் திவாகரன் (வயது 29) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

நெல்லியடி கலட்டிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளில் இளைஞர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதாகவும் இதில் ஒரு குழுவின் தாக்குதலில் இந்த இளைஞர் படுகாயமடைந்ததாகவும் நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இதனையடுத்து நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (18)

# மக்களைத்தேடிச்சென்று சேவையாற்ற அரச ஊழியர்கள் முன்வரவேண்டும்

## ஓய்வு நிலை அஞ்சல் அதிபர் குமாரவேலு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க ஊழியர்கள் அலுவலகங்களோடு மட்டும் தமது சேவையை நிறைவு செய்யாது வீடுகளில் மக்களைத் தேடிச் சென்று சேவையாற்ற முன்வர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம் பிரதம தபாலக ஓய்வு நிலை அஞ்சல் அதிபர் சி.குமாரவேலு வட்டு. கிழக்கு கிராம சேவையாளராக இருபது வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் க.சிறிகரனின் சேவையைப் பாராட்டி நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே சி.குமாரவேலு இவ்வாறு குறிப்பிட்டார்.

வட்டு. கிழக்கு ஜனசக்தி சன சமூக நிலையத்தில் சி.சிறீராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் குமாரவேலு தொடர்ந்து உரையாற்றுகையில், காரைநகரைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் பலர் நீண்டகாலமாகவே நடமாடும் சேவையைச் செய்து வருகின்றனர். அதாவது அலுவலகங்களோடு தமது பணியைப் பூர்த்தி செய்யாது மக்களின் வீடுகளுக்கு தேடிச் சென்று சேவை செய்து வருகின்றனர். அந்த வரிசையில் கிராம சேவையாளர் சிறிகரன் வீடுகளுக்குச் சென்று மக்களுக்குச் சேவை புரிந்தவர் அவருக்கு இந்த சன சமூக நிலையம் பாராட்டுவிழா எடுப்பது போற்றுதற்குரியது.

காரைநகர் சிறந்த கல்விமான்களையும் கொடைவள்ளல்களையும், நல்ல பண்பாளர்களையும் கொண்ட கிராமம். பல்வேறு சமூக மக்களும் ஒன்றிணைந்து வாழும் பிரதேசம். இன்றும் இங்கு அரசாங்க சேவையில் உள்ள அதிபர், ஆசிரியர், வங்கியாளர்கள், கிராமசேவையாளர்கள் தபால் உத்தியோகத்தாகள் என பலரும் மக்களின் வீடுகளுக்குச் சென்று சேவையாற்றுவதைக் காண முடிகிறது. அவர்கள் பின்தங்கிய சமூகத்தினருக்கு உதவுவதோடு அவர்கள் கல்வி பெறுவதற்கும், அபிவிருத்தியடைவதற்கும் பல்வேறு வழிகளில் உதவி வருகின்றனர்.

இந்நிகழ்வில் முன்னாள் கிராம சேவையாளர் சிறீகரன் சங்க உறுப்பினர்களால் மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (10)



காவேரி கலாமன்றத்தின் சமுதாய தொழில்நுட்ப பிரிவு நடாத்திய மாற்றுத் திறனாளிகளுக்கான விசேட கணனி ஆறு மாத பயிற்சி நிறைவு யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது காவேரி கலாமன்ற இயக்குநர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிய போது... (90)

## விசேட பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க (லிப்கோ) விசேட பொதுக் கூட்டம் நாளை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு லிப்கோ மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைவர் கு.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது பால் உற்பத்தி தொழிற்சாலைகள் எதிர்காலத் திட்டம் தொடர்பில் ஆராயப்பவுள்ளதாகவும் எனவே அங்கத்தவர்கள் அனைவரையும் உரிய நேரத்தில் சமுகமளிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நூல் வெளியீட்டுவிழா

(யாழ்.நிருபர்)

எழுத்தாளர் உடப்பூர் வீரசொக்கன் எழுதிய "உடப்பு நாட்டாரியலில் திரௌபதை" என்னும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 20ஆம் திகதி உடப்பூர் இந்துநெறிக்கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு மு.சொக்கலிங்கசாமி உடப்பூர் இந்துநெறிக்கழகத் தலைவர் பாலகிருஷ்ணன் முருகானந்தன் ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக உடப்பு இந்து ஆலய நிர்வாக சபையின் முன்னாள் தலைவர் வேலுப்பிள்ளை சிவபாலன் கலந்து கொள்ளவுள்ளார். (10)

# குரங்குகளின் குடித்தொகையை கட்டுப்படுத்தும் செயற்றிட்டம்

தென்மராட்சி பிரதேசத்தில் மக்களுக்கும் பயிர் வகைகளுக்கும் தொடர்ந்தும் அழிவை ஏற்படுத்தி வரும் குரங்குகளின் குடித்தொகையை குறைத்து தென்மராட்சி பிரதேசத்தின் உயிர்ப்பல்வகைமையை சமநிலைப் படுத்தும் நோக்கத்திற்காக யாழ் மாவட்ட விவசாயத் திணைக்களம் வனவிலங்கு திணைக்களத்துடன் இணைந்து UNDP இன் உலகளாவிய சூழல் வசதி/ சிறிய கொடைத்திட்டம் (GEF/SGP) நிதியீட்டத்துடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

UNDP இன் உலகளாவிய சூழல் வசதி/ சிறிய கொடைத்திட்டம் (GEF/SGP) நிதியானது சாவகச்சேரி பழ உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (பழமுதிர்ச் சோலை) ஆல் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இப்பிரதேசத்தில் உள்ள குரங்குகளின் எண்ணிக்கை மற்றும் அவை வருகை தரும் பாதை பற்றிய எதுவித தகவல்களும் இல்லாததால் மாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகமும் இணைந்து 60 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளிலும் மக்களின் பங்களிப்புடன் குரங்குகள் நடமாடும் திகதி, நேரம், கூட்டத்திலுள்ள குரங்குகளின் எண்ணிக்கை, குரங்குகள் தங்கி நின்ற நேரம், சேத விபரம் போன்ற தகவல்கள் திரட்டப்பட்டன. இதனை அடிப்படையாக வைத்து இலங்கையின் குரங்குகளில் நிபுணதுவம் பெற்ற இரஜரட்டை பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர்.ஆர்.வன்டகோன் (Primatologist) தென்மராட்சி பிரதேசத்தின் குரங்குகளின் நடத்தை பற்றிய ஆய்வினை 30.01.2015-02.02.2015 வரையான காலப்பகுதியில் தென்மராட்சி பிரதேசத்தில் தங்கி நின்று மேற்கொண்டார்.

**கி.சிறீபாலசுந்தரம்**
**பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரி)**
**யாழ்ப்பாணம்**

இதனைத் தொடர்ந்து வனவிலங்கு திணைக்களத்தின வழிகாட்டலில் அவர்களால் வழங்கப்பட்ட கூடுகளில் தற்போது குரங்குகள் பிரதேச மக்களால் பிடிக்கப்பட்டு பின்னர் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் வனவிலங்கு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் பிடிக்கப்பட்ட குரங்கு ஒன் றிற்கு ரூபா.1000.00 வீதம் குரங்கு பிடிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

முதற்கட்டமாக ஒரு கூடு வழங்கப்பட்டு அதனூடாக ஒரு மாத காலத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் 18 குரங்குகள் பிடிக்கப்பட்டு வனவிலங்கு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. மேலதிக கூடுகள் விரைவில் செய்விக்கப்படவுள்ளன. இக்கூடுகள் தென்மராட்சி பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டு மக்களின் உதவியுடன் மேலும் குரங்குகளை பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

வனவிலங்கு திணைக்களம் பிடிக்கப்பட்ட குரங்குகளை வனவிலங்கு சரணாலயங்களில் பாதுகாப்பாக விடுவிக்க நடவடிக்கை மேற்கொண்டு. வருகின்றது.



கு.பாலகுமார் என்பவரால் வனவிலங்கு திணைக் களத்தின் கூடுகளில் பிடிக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட குரங்குகள்.



சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியத்தால் பயனாளிக்கு காசோலை வழங்கப்படுகின்றது



யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறீ பாலசுந்தரம் அவர்களால் பிடிக்கப்பட்ட குரங்குகள் கையேற்கின்றனர்



யாழ். மாவட்ட விவசாயத்திணைக்களத்தால் குரங்குகள் வடமாகாண வனவிலங்கு திணைக்கள அதிகாரி டாக்டர்.பா.கிரிதரனிடம் கையளிக்கப்படும்போது...

# உள்ளூராட்சி சபை ஊழியர்களின் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படவேண்டும்

## அரசாங்க பொது ஊழியர் சங்க தலைவர் லோகநாதன்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ளூராட்சி சபை ஊழியர்களின் பிரச்சினைக்கு வடமாகாண சபையே நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்கவேண்டும். இதுதொடர்பில் வடமாகாண சபை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்க தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக்கிளையின் இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது இதில் தலைமை வகித்து உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கு ஊழியர்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க பல போராட்டங்களை செய்யவேண்டியுள்ளது. வடமாகாணத்தில் கூடுதலாக உள்ளூராட்சி சபைகளில் இருந்தே ஊழியர்கள் பலபிரச்சினைகளை முன்வைக்கிறார்கள். வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்குப் பொறுப்பான வடமாகாணசபை மூலமே உள்ளூராட்சி பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும்.

அதற்கான சந்திப்புக்கு முதலமைச்சரிடம் அனுமதி கேட்டு பல மாதங்கள் கடந்துவிட்ட போதும் அதற்கான பதில் முதலமைச்சரிடமிருந்து கிடைக்கவில்லை. வடமாகாண ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். வடமாகாணசபையில் அமைச்சுக்களுக்கு ஆலோசனைச்சபைகள் அமைக்கும்படி கேட்டிருந்தோம்.அப்படி அமைத்தாலாவது அவர்களுடன் ஆலோசித்து அதனூடாக பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் கண்டிருக்கலாம் எனத் தெரிவித்தார்

இக்கூட்டத்தில் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றதுடன் பதினாறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக பொதுச்சபையில், நிறைவேற்றப்பட்டது. அதன் பிரதிகள் வடமாகாண ஆளுநர் பிரதம செயலாளர், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (160)

# பகிரங்கசேவை நிதியத்தின் பொதுக்கூட்டமும் கௌரவிப்பும்

(வடமராட்சி)

இலங்கை பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் கௌரவிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத்தலைவர் எஸ். கதிரமலை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் பிரதம விருந்தினராகவும், பிரதேச செயலக கணக்காளர் எஸ்.கிருபாகரன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ். சீவரத்தினம் நிதிஉதவியாளர் வி.சிவகுமார் ஆகியோர் சிறப்புவிருந்தினராகவும், பகிரங்க இலங்கை சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ். மாவட்டத்தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் உபதலைவர் வீ எஸ்.வீரசிங்கம் ஆகியோர் கௌரவவிருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர்.

சங்கச் செயற்குழு உறுப்பினரான இலங்கை நூலக சேவை இணைப்பாளர் திருச்செல்வத்திற்கு ஊடகமாமணி விருது பெற்றமைக்காக இக்கூட்டத்தில் விருதுவழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

யாழ். சனசவங்கி முகாமையாளர் எஸ்.சபேஸ் ஓய்வூதியர்களுக்கான கடன் வசதிகள் பற்றி உரையாற்றுவாரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (01)



'சிதறல்களில் சில துளிகள்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். ஒஸ்மானியாக்கல்லூரி மஹ்முத் மண்டபத்தில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றபோது... (105)

### சிங்களம்...

நீங்கள் இலங்கையின் தமிழ் அல்லது முஸ்லிம் ஆக இருந்து - மற்றும் சிங்கள மொழியில் சரளமான புலமை உள்ளவராகவும் இருந்தால் - மதவெறி கொண்ட சிங்கள இன அரசியல் வாதிகள் இந்த மொழி என்கிற துருப்புச் சீட்டை உங்களுக்கு எதிராக விளையாட முடியாது என்பது எனக்கு சர்வ நிச்சயம்.

'இந்த நாடு சிங்கள - பௌத்தர்களுக்கே சொந்தமானது' போன்ற தீவிரவாத பிரகடனங்களை நான் தொலைக்காட்சிகளில் பார்க்கிறேன். எனது கேள்வி என்னவென்றால் மீதமுள்ளவர்களுக்கு என்ன என்பதுதான்? ஒரு இலங்கையன் என்கிற வகையில் நாம் அனைவரும் சம உரிமைகள் மற்றும் பொறுப்பு உள்ளவர்களே. இலங்கை, இலங்கையர்கள் அனைவருக்கும் சொந்தமானது என்கிற உணர்வை உருவாக்க நாங்கள் என்ன செய்ய வேண்டும்? இந்த யோசனை - நாங்கள் அனைவரும் சம உரிமையும் மற்றும் சம பொறுப்பும் கொண்ட இலங்கையர்கள் - ஒரு அரசியல் அதிசயமா? எங்களால் ஒருபோதும் இதை அடைய முடியாதா?

இனவாதம் மற்றும் பழங்குடி அரசியல் தன்மைகளுக்கு அப்பால் சென்று நாம் இலங்கையர் என்கிற ஒரு தேசிய இனம் என்பதை நாம் எப்போது அடையப் போகிறோம்? பொதுவான ஒரு மொழி இல்லாமல் இலங்கையன் என்கிற ஒற்றை அடையாளத்தை பெறுவது சாத்தியமாகுமா? முதலில் சிங்கள பௌத்தர்கள் என்கிற பெரும்பான்மை அடையாளம் அவர்களிடம் உள்ளவரை எங்களால் இந்த பிரச்சினையை ஒருபோதும் தீர்க்க முடியாது.

சிங்கள மொழி என்கிற இன அடையாளத்திலிருந்து எங்களை எப்போதாவது பிரிக்க முடியுமா? தொடர்ந்து பிளேக் நோய் போல எங்களை தொற்றிக் கொண்டிருக்கும் எரியும் எங்கள் தேசிய பிரச்சினையான, ஒரு ஒற்றை தேசிய அடையாளம் இல்லாத நமது நாடு மற்றும் அதற்காக நாம் என்ன செய்யவேண்டும்? என்பது பற்றியும் நாம் பேசலாம்.

# தொழில்வாய்ப்பும் பரீட்சைகளும்

## சமூக சேவைகள் திணைக்களம்

சமூக சேவைகள் நலன்புரி மற்றும் கால்நடை வள அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள சமூக சேவைகள் திணைக்களத்தின் பின்வரும் பதவி நிலைகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. பயிலுநர் மொழிபெயர்ப்பாளர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது : 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2. வீட்டு நிர்வாகிகள் :

க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் தமிழ், கணிதம் சித்தியுடன் ஏதாவது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது : 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. சிறுவர் அபிவிருத்தி உதவியாளர்கள் :

க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது குறைந்தது இரண்டு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது : 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. சமையல் உதவியாளர்கள் :

க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது : 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. புனர்வாழ்வு உதவியாளர்கள் :

க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் ஒரு அமர்வில் குறைந்தது இரண்டு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 2ஆம் மாடி, கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

இதற்கான மேலதிக விபரங்களை கடந்த 06.03.2015 ஆம் திகதி வெளியாகிய தினகரன் பத்திரிகையில் பார்வையிட முடியும்.

## இலங்கை மத்திய வங்கி முகாமைத்துவ பயிலுநர்கள் (Central Bank Management Trainees)

இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவ பயிலுநர்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்பு (மேற்பிரிவு) உடன் கூடிய சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பின்வரும் பாடங்களில் ஒன்றை உள்ளடக்கிய பொதுப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- பொருளாதாரதம் / வேளாண்மைப் பொருளாதாரம்
- கணக்கியல் / வங்கித் தொழில் / நிதி
- வர்த்தகம் / முகாமைத்துவம்
- பொது / வியாபார நிர்வாகம்
- புள்ளிவிபரவியல் / கணிதம்
- பொறியியல்
- கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம்
- சட்டம் (சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசாகப் பணியாற்றுவதற்கான அங்கீகாரமுடையவர்)

அல்லது

மேற்குறிப்பிட்ட பாடங்களுள் / துறைகளுள் ஒன்றில் முதுமாணிப் பட்டம் ஒன்றினை பட்டப்பின்படிப்பு பட்டமாக அல்லது உயர்மட்ட தரம் ஒன்றினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றிருத்தல்.

விண்ணப்பதாரிகள் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர்-மனிதவளத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு-1 என்ற முகரிவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைதைதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'முகாமைத்துவ பயிலுநர் பதவிக்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

தொகுப்பு :- சி.என்.எச். சாளீஸ்

# ஐ.நா.அறிக்கை தள்ளிப்போனது

# தமிழர் தரப்புக்கு பாதிப்பு இல்லை

## மேற்குடன் ஒத்துப்பாடுகிறார் சுமந்திரன்

(கொழும்பு)

உரிமை மீறல்கள் தொடர்பான ஐ.நா.விசாரணை அறிக்கை கால தாமதத்தால் ஏற்படுகின்ற ஏமாற்றத்தை தவிர தமிழர்களுக்கு அது எந்த வகையிலும் பாதகமானதல்ல என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

வவுனியாவில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சி மத்திய செயற்குழு கூட்டத்தில் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை பின்னர் கட்சியின் நிலைப்பாடாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் இலங்கை சம்பந்தமான சர்வதேச விசாரணை அறிக்கையை இந்த வருடம் மார்ச் மாதத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் வரை பிற்போடுவதற்கு சிபார்சு செய்தமை சம்பந்தமாகவும், அந்த இடைப்பட்ட காலத்தில் உள்நாட்டு பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்படுவது சம்பந்தமாகவும் இந்த விடயங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் எனது பங்களிப்பு பற்றியும் சில வார்த்தைக்ள் நான் பேசுவது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

சென்ற வருடம் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளையில் நடந்த சில சம்பவங்களை முதலில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நாங்கள் 2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அமெரிக்க இராஜாங்க அமைச்சோடு பேசிய பிறகுதான் இப்படியானதொரு தீர்மானத்தை முன்னெடுத்து நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா முன்வந்தது. நாங்கள் தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையை கேட்டிருந்த போதும் 2012, 2013 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் ஒரு விசாரணையை நடாத்த வேண்டும் என்று தான் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

2013 ஆம் ஆண்டு மிக முக்கியமான சொற்பதம் ஒன்று அந்தத் தீர்மானத்திற்கு கொண்டு வரப்பட்டது. நிலைமாறும் நீதி (Transitional Justice) என்பது உடனடியான குற்றங்களுக்கு தண்டனை மட்டுமல்லாது இந்த பிரச்சினையின் மூல காரணம், அதன் இறுதித் தீர்வு என்ற பின்னணியையும் கருத்திற்கொண்டு அந்த சூழ்நிலைக்கு எது பொருத்தமான நீதி என்பதை தீர்மானிக்கும் ஒரு கோட்பாடாகும். இறுதியில் 2014 ஆம் ஆண்டு ஒரு சர்வதேச விசாரணை ஏற்படுத்தப்பட்டது. அதிலும் 10 ஆவது பந்தியின் முதற் பகுதியில் உயர் ஸ்தானிகர் தேசிய பொறிமுறைகளை மேற்பார்வை செய்ய வேண்டும் என்றும் அடுத்ததாக தானாகவே உரிய நிபுணர்களின் உதவியுடன் ஒரு சர்வதேச விசாரணையை நடாத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது உள்ளக பொறிமுறைகளை மேற்பார்வை செய்கிற அதே உயர் ஸ்தானிகர் அவற்றிக்கு சமாந்திரமாக ஒரு சர்வேதேச விசாரணையையும் நடத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக வரவேற்றது அந்த நேரத்திலும் கூட பலர் போதிய விளக்கம் இன்மையினாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இந்தத் தீர்மானத்தில் சர்வதேச விசாரணை கிடையாது என்று சொல்லி எதிர்த்தார்கள்.

அறிக்கை பிற் போடப்பட்டது சம்பந்தமாகவும் உள்ளக பொறிமுறை சம்பந்தமாகவும் பலருக்கு இருக்கின்ற தெளிவின்மை நீக்கப்பட வேண்டும். இந்த மாதம் வெளிவரவிருந்த அறிக்கையை பிற் போடுவதற்கான முயற்சிகள் ஆரம்பமான வேளையிலேயே, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜனவரி 26 ஆம் திகதி மனித உரிமை உயர் ஸ்தானிகருக்கு கடிதம் மூலம் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருந்தார். அறிக்கை தாமதம் இல்லாமல் வெளிவருவதே எமது மக்களின் எதிர்பார்ப்பு



என்றும் உண்மை கண்டறியப்படுவதன் அடிப்படையிலே மட்டும்தான் உண்மையாண நல்லிணக்கம் காணப்பட முடியும் என்றும் வலியுறுத்தி இருந்தார்.

இதே கால கட்டத்தில் இந்த தீர்மானத்தை முன்மொழிந்த நாடுகளாகிய அமெரிக்காவோடும் பிரித்தானியாவோடும் நாம பேச்சுவார்த்தை நடாத்தினோம். ஐயாவின் பிரதிநிதியாக நான் ஜெனிவாவிற்கு சென்று உயர் ஸ்தானிகரின் அலுவலகத் தில் உயர் அதிகாரிகளோடும் விசாரணைக் குழு தலைவியோடும் பேச்சுவார்த்தை நடாத்தினேன். எங்களுடைய நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றத்தையும் நாங்கள் தெரிவிக்கவில்லை. ஆனால் எங்களுடைய வேண்டுகோளுக்கும் மாறாக அறிக்கையை பிற் போடுவதற்கான தீர்மானம் தற்போது எடுக்கப்பட்டிருக்கிறது.

அதற்கான காரணங்களையும் இலங்கை அரசாங்கத்திட மிருந்து பெற்றுக் கொண்ட வாக்குறுதிகளையும் உயர்ஸ்தானிகர் மிகத் தெளிவாக அறிவித்திருக்கிறார். கால தாமதத்தால் ஏற்படுகின்ற ஏமாற்றத்தை தவிர மற்ற எல்லா வகையிலும் இந்த பிற்போடுதல் எமக்கு நன்மையாக அமையும் என்பதே எனது கருத்து என்றும் தெரிவித்துள்ளார்.

## ஊடகவியலாளருக்கு கௌரவம் விண்ணப்பிக்க இப்போது வாய்ப்பு

(யாழ்.நிருபர்)

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் வகையில் 2014 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஊடகவியலாளர்களைத் தெரிவு செய்யும் முகமாக அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்குத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணபத்தையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல.96 பேனார்ட் சொய்சா மாவத்தை (கிருலவீதி) கொழும்பு - 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். (10)

## படகுகள் விடுவிப்பு

(சென்னை)

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன் பிடியில் ஈடுபட்டபோது கடந்த மே மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் இந்திய கரையோர பாதுகாப்பு படையினரால் கைப்பற்றப்பட்டிருந்த இலங்கை மீனவர்களின் ஐந்து படகுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் தூத்துக்குடி கடற்பரப்பில் இருந்து குறித்த படகுகள் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் படகுகளில் இருந்து கைது செய்யப்பட்டிருந்த 16 மீனவர்கள் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## அரசியல் யாப்பு திருத்தம் சிந்தனைத்தெளிவு அரசுக்கு இல்லை



அரசியல் யாப்பு சீர்திருத்தம் செய்வதாக வாக்களிக்கப்பட்டாலும், அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்ற தெளிவு இதுவரையில் புதிய அரசாங்கத்துக்கு இல்லாதிருப்பதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் அரசியல் துறையின் முன்னாள் பேராசிரியர் எம்.ஓ.ஏ.டி. சொய்சா தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியொன்றிலேயே அவர் இதனைக கூறியுள்ளார்.

அரசியல் யாப்பை மாற்றி கொண்டுவரத் தீர்மானித்துள்ள புதிய முறைமை என்ன என்பது இதுவரையில் அறிவிக்கப்படவில்லை.

இவர்கள் கொண்டு வருவதாக சொல்லும் சீர்திருத்தத்திலேயே இந்த தெளிவற்ற தன்மை புலப்படுகின்றது.

நிறைவேற்று ஜனாதிபதி முறை என்றோ, நிறைவேற்று பிரதமர் முறை என்றொ ஒரு அரசாங்க முறையோன்று உலகில் எங்கும் கிடையாது எனவும் பேராசிரியர் அச்செவ்வியில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## படைக்குறைப்புக்கு வாய்ப்பே இல்லை

### ரணில் திட்டவட்டம்

(கொழும்பு)

பாதுகாப்பு நிலைமையில் முன்னேற்றங்கள் ஏற்படும் வரையில் வடக்கு, கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து உடனடியான இராணுவ குறைப்புக்கு வாய்ப்பில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தமிழகத்தின தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழர் பிரதேசங்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றங்கள் என்ன என்பது தொடர்பில் அவர் தகவல்களை வெளியிடவில்லை. அரச கட்டுப்பாட்டில் இருந்த பல காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் படையினர் முகாமிட்டுள்ளனர்.

இந்தநிலையில் இராணுவத்தினர் சில மாவட்டங்களில் இருந்து ஏன் விலகிச்செல்ல வேண்டும் என்பதற்கான காரணத்தை அறிய முடியவில்லை. இராணுவத்தினர் முகாமிட்டுள்ள நிலையானது இந்தியாவை அடிப்படையாகக் கொண்டதே என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

எனினும் வடக்கில் பொதுமக்களின் விகிதாசாரத்துடன் ஒப்பிடுகையில் படையினர் எண்ணிக்கை அதிகம் என்பதை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார். 13 ஆவது அரசியல் அமைப்பை முழுமையாக அமுல்படுத்த முடியும் என்று குறிப்பிட்ட அவர், எனினும் பொலிஸ் அதிகாரத்தை முதலமைச்சரிடம் வழங்கினால் பொலிஸ் அதிகாரம் தனிப்பட்ட இராணுவப் பிரிவாக மாறிவிடும் அச்சம் உள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் வகையில் இரண்டு மாகாண சபைகளும் தீர்மானம் நிறைவேற்றினால் அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பை நடாத்தும் என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## உள்ளகவிசாரணையின் போது சாட்சியம் வழங்கத்தயார்

### முன்னாள் பிரதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சாட்சியமளிக்கத் தயார் என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

புதிய விசாரணைப் பொறிமுறைமையின் கீழ் சாட்சியமளிக்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்ததாகவும், அதேபோன்று புதிய உள்ளக விசாரணைப் பொறிமுறைமையின் கீழும் சாட்சியமளிக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான உள்ளக விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணைகளை எதிர்ப்பதாகவும் உள்ளக விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினர் வேண்டுமென்றே தமிழ் மக்களை கொலை செய்யவில்லை எனவும், இனச் சுத்திகரிப்பு இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான மீட்புப் பணிகளில் படையினர் ஈடுபட்டதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எயிட்ஸ் நோயாளிகள் இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 2014 ஆம் ஆண்டு இலங்கையில் அதிகளவான எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய் நிவாரண பிரிவு இதனைத்தெரிவித்துள்ளது.

அதன் பணிப்பாளர் வைத்தியர் சிறிரி லியனகேவின் தகவல்படி, கடந்த வருடம் 229 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு 196 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எச்.ஐ.வீ.பாதிப்பு குறித்த பரிசோதனைகளுக்கான வளங்கள் அதிகரித்துள்ள நிலையில், இவ்வாறு அதிகளவான நோயாளர்களை அடையாளம் காணக்கூடியதாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12) சரியான விடையின் கீழ் கோடிடுக

68. பின்வரும் உணவுகளுள் எது ஒரு நிறை உணவு?
(1) மீன் (2) இறைச்சி (3) பால் (4) சோறு

69. பின்வரும் உணவுகளுள் எது ஒரு தாவர உணவாகும்?
(1) பால் (2) முட்டை (3) சோறு (4) கருவாடு

70. மனிதனின் பிரதான உணவு வேளைகள் எத்தனை?
(1) ஒன்று (2) இரண்டு (3) மூன்று (4) நான்கு

71. பின்வரும் உணவுகளில் எதில் புரதச்சத்து அதிகமுள்ள உணவு எது?
(1) அரிசி (2) சோயாஅவரை (3) பிட்டு (4) கீரை

72. பின்வரும் உணவுகளில் கொழுப்புச்சத்து அதிகமுள்ள உணவு எது?
(1) நெய் (2) பால் (3) சீனி (4) பருப்பு




73. உணவு பழுதடையக் காரணமான நுண்ணங்கிகளில் ஒன்று எது?
(1) வைரசு (2) பக்றீரியா (3) ஈ (4) நுளம்பு

74. மீன்கறிக்கு புளி அதிகமாக இட்டால் கறி எச்சுவையை கொண்டதாக இருக்கும்?
(1) உறைப்பு (2) புளிப்பு (3) உப்பு (4) இனிப்பு

75. பழுதடைந்த பாணில் காணப்படுவது எது?
(1) பூஞ்சணம் (2) சிவப்பு நிறம்
(3) மஞ்சள் நிறம் (4) வெள்ளை நிறம்

76. விற்றமின்கள் அதிக அளவில் காணப்படுவது எதில்?
(1) இறைச்சி (2) மீன்
(3) முட்டை (4) கீரைவகைகள்

(13) பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக

77.  ..................
78.  ..................
79.  ..................
80.  ..................
81.  ..................
82.  ..................
83.  ..................
84.  ..................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).1. வெள்ளம் 2. மடு 3. பிள்ளை (02). 4. ✓ 5. x 6. x
(03).7. தாய் 8. கூறமுடியாது 9. நான்கு 10. நேர்வே 11. 04 (04).12. 7பேர்
13. 26பேர் 14. 15பேர் (05).15. 60பேர் 16. 120பேர் 17. 2 18. 2
(06).19. A 20. மகன்,தாய் 21. உதயனின் தங்கை (07).22. [☒] 23. [☒]
24. [☒] 25. [☒] 26. 14 27. 21 28. 18 29. 14
30. 07 31. 1மணி 30நிமிடம் 32. 03 33. 12:30 34. செவ்வாய்க்கிழமை
(08).35. காலைக்காட்சி 36. நீர்த்துளிகளில் சூரியஒளி பட்டமையினால் 37. ஆலமரம், அரசமரம், நாணல்
38. சலசல 39. சின்னச்சின்ன 40. ஒலி எழுப்புகின்றன
(09).41. தரு,விருட்சம் 42. பட்சி,புள் (10). 43. ஆரவாரம்
44. சாதாரணமான (11).44. மகிழ்ச்சியடைதல் 46. பொறாமை கொள்ளல்

இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2015 (சுற்றாடல்)

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



(01) பொருத்தமான சொற்களை இணைக்கவும்




| | | |
|---|---|---|
| 01. | நாய் | விறாண்டும் |
| 02. | பூனை | கடிக்கும் |
| 03. | மாடு | முட்டும் |
| 04. | கோழி | உதைக்கும் |
| 05. | கழுதை | கொத்தும் |

(02) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக

| மென்மையானது | ஆபத்தான | தடுப்பூசி | நன்மைகளைப் | உடலைச் |
|---|---|---|---|---|

06. பிராணிகளைப் கோபப்படுத்தினால் ........................ விளைவுகள் கூட ஏற்படும்.
07. வீட்டுப் பிராணிகளுக்கு ........................ போடுதல் வேண்டும்.
08. பூனையின் பாதம் ........................
09. சுற்றாடலில் காணப்படும் சில பிராணிகளால் மனிதன் பல........................ பெறுகின்றான்.
10. பூனை தனது நாக்கினால் தனது ........................ சுத்தப்படுத்தும்

(03) பின்வரும் படங்கள் ஒவ்வொன்றினாலும் மனிதன் அடையும் பயன் ஒன்று வீதம் தருக

11.  ..................
12.  ..................
13.  ..................
14.  ..................
15.  ..................
16.  ..................
17.  ..................
18.  ..................

(04) வினாக்களுக்கு விடை தருக

19. வீட்டுப் பிராணிகளினால் ஏற்படும் பாதிப்புக்கள் மூன்று தருக?
........................
20. பிராணிகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூன்று தருக?
........................
21. நோய்வாய்ப்பட்ட பிராணிகள் காட்டும் அறிகுறிகள் மூன்று தருக?
........................

22. செல்லப்பிராணிகளை வளர்ப்பதனால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக?

.......................................................................................................

23. உமது சுற்றாடலில் காணப்படும் பிராணிகள் உணவைக் கண்டவுடன் காட்டும் இரு நடத்தைக் கோலங்களைத் தருக?

.......................................................................................................

24. ஆபத்தை ஏற்படுத்தும் பிராணிகள் இரண்டைக் குறிப்பிடுக. அவற்றினால் எவ்வாறான ஆபத்து ஏற்படுகின்றது என விபரிக்குக?

.......................................................................................................

**(05) பின்வரும் அட்டவணையை நிரப்புக**

| | வீட்டுப்பிராணிகள் | வீட்டுச்சூழலில் வளர்க்கும் பிராணிகள் | நோய்க்காவிகள் | ஊர்ந்து திரிவன |
|---|---|---|---|---|
| | நாய் | கோழி | தெள்ளு | நத்தை |
| 25. | | | | |
| 26. | | | | |
| 27. | | | | |
| 28. | | | | |
| 29. | | | | |

**(06) பின்வருவனவற்றின் பயன்பாடுகள் ஒன்று வீதம் தருக**

30. கண் ........................................ 31. மூக்கு ........................................

32. காது ........................................ 33. நாக்கு ........................................

34. வாய் ........................................ 35. தோல் ........................................

**(07) சரியான விடையின் கீழ் கோடிடுக**

36. துணியை வெட்டுவதற்குப் பயன்படும் பொருள் எது?
(1) கத்தி (2) கத்தரிக்கோல் (3) பிளேட் (4) கோடரி

37. ஆசிரியரின் மேசையை அழகுபடுத்தக்கூடிய ஒரு பொருள் எது?
(1) வெண்கட்டி (2) மேசைவிரிப்பு (3) பேனை (4) நீர்ப்போத்தல்

38. நாட்களை அறியப் பயன்படுவது எது?
(1) நாட்காட்டி (2) புத்தகம் (3) டயரி (4) கடிகாரம்

39. மேசையின் நீளத்தை அளக்கப் பயன்படும் கருவி எது?
(1) அளவுக்கோல் (2) பாகைமானி (3) கவராயம் (4) காகிதம்

40. கரும்பலகையில் எழுதப் பயன்படும் பொருள் எது?
(1) கருங்கட்டி (2) வெண்கட்டி (3) பேனை (4) கலர்பென்சில்

41. ஆடைகளில் அதிகம் அழுக்கடையும் பகுதி எது?
(1) கொலர்பகுதி (2) இடுப்புப்பகுதி (3) முதுகுப்பகுதி (4) தோள்பகுதி


42. ஆடைகள் அசுத்தமடையக் காரணமாயிருக்கும் காரணிகளுள் ஒன்று யாது?
(1) அழுக்கான கை (2) உடையை உலர விடுதல்
(3) உடையைக் கழுவுதல் (4) உடையை மூடிவைத்தல்

43. உடைகளைக் கழுவப் பயன்படும் ஒரு பொருள் எது?
(1) சலவைத்தூள் (2) விம்சோப் (3) சாம்பல் (4) புளி


44. பின்வருவனவற்றுள் எது உலோகத்தினால் செய்யப்பட்ட பொருளாக இருக்கும்?
(1) கதிரை (2) மேசை (3) கத்தரிக்கோல் (4) புத்தகப்பை





**(08) பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக**


45. 
........................


46. 
........................


47. 
........................

48. 
........................

49. 
........................

50. 
........................

51. 
........................

52. 
........................

**(09) தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக**

53. கொலர், கமுக்கட்டுப்பகுதி, சட்டைப்பை போன்ற பகுதிகளில் அதிகம் அழுக்குப் படிவதில்லை ( )

54. ஆடைகளிலுள்ள அழுக்குகளை அகற்றுவதற்கு சவர்க்காரம், சவர்க்காரத்தூள் போன்றவை பயன்படுத்துகின்றன ( )

55. ஆடைகளிலுள்ள அழுக்கை அகற்றுவதற்கு சலவை இயந்திரங்களும் தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்றன ( )

56. ஆடையில் பலாப்பால் பட்டால் தேங்காய் எண்ணெயினால் உரசி பலாப்பாலை அகற்றலாம் ( )

57. பாத்திரங்களிலுள்ள அழுக்குகளை அகற்ற விம்சோப்பைப் பாவிக்கலாம் ( )

**(10) பொருத்தமான சொற்களை இணைக்குக**

| | | |
|---|---|---|
| 58. | கரும்பலகை | சலவைத்தூள் |
| 59. | உடையைக் கழுவுதல் | அலுமாரி |
| 60. | பொருட்களைப் பாதுகாப்பாக வைக்க | வெண்கட்டி |
| 61. | உலோகம் | புத்தகம் |
| 62. | காகிதம் | இரும்பு |

**(11) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக**

| | | | | |
|---|---|---|---|---|
| உடை | துடைத்தல் | சுத்தமாக | உலோகத்தினால் | சவர்க்காரம் |

63. அணிந்திருக்கும் ஆடையில் கை ........................................ கூடாது

64. விளையாடும் போது ........................................ அழுக்கடைகின்றது

65. பாடசாலையில் ஒலிக்கும் மணி ........................................ செய்யப்பட்டுள்ளது

66. வகுப்பறையைச் ........................................ வைத்திருத்தல் வேண்டும்

67. உணவு உண்பதற்கு முன்பு ........................................ இட்டு கை கழுவுதல் வேண்டும்

# தமிழருக்கான தீர்வு

இன்றைய சூழ்நிலையை எடுத்துக் கொண்டால் மக்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் குற்றம் சாட்டுவதும் அவரது தோல் வியை கேலி செய்வதையுமே இன்றைய தமது வேலையாகக் கொண்டுள்ளனர். சமூக வலைத்தளங் களில் தமிழரின் சுதந்திரம் என்று பேசுவோர் மகிந்தவை காட்டமாக விமர்சித்து வருகின்றனர்.

அத்துடன் எமது அயல்நாடான இந்தியாவின் தமிழ்நாடு மாநில தமிழ் அரசியல்வாதிகள் ஜனாதிபதி மைத்தி ரிக்கு வாழ்த்துத் தெரிவிப்பதோடு மகிந்தவை அவதூறாகப் பேசுகின்றனர். இப்பேச்சுக்கள் அவர்களை அரசியல் அரங்கில் ஒருபடி மேலேற்றும். ஆனால் அது சாதாரண பொது மக்களுக்கு என்ன செய்துவிடப் போகிறது?

மைத்திரிக்கு வாழ்த்துத் தெரி விக்கும் எமது மக்கள், மைத்திரியின் வெற்றியைக் கொண்டாடும் தமிழர்கள் ஒரு விடயத்தை சிந்திக்க மறுக்கின்ற னர். மகிந்தவும் சரி மைத்திரியும் சரி இருவரும் சிங்களவரே. தனது பல வருட நன்மை சுகாதார அமைசராக் கிய கட்சித் தலைமைக்கு துரோக மிழைத்து விட்டு வேறு ஒரு கட்சியு டன் கட்சிகளுடன் கூட்டணி வைத் திருக்கும் ஒருவர் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு துரோக மிழைக்க மாட்டாரென்று என்ன நிச்சயம்? இதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் உணராமலில்லை. இன்று அவர்கள் ஈழத்தில் அரசியலில் நிலைத்திருக்க வேண்டுமெனில் அவர்களுக்கு தமிழர்களின் வாக்குகள் மிக முக்கியம். எனவே அவர்கள் தமிழ் இனவாதம் பேசி மக்களது உணர்வுகளைத் தூண்டி தமக்கான வாக்குகளைப் பெற முயல்கின்றனர். பெரும்பான்மை மக்களும் தமக்கு நன்மையளிக்கக்கூடியவர்களை விடுத்து தமது உணர்வுகளைத் தூண்டுபவர்களுக்கு அறியாமையால் வாக்களிக்கின்றனர்.

இன்றைக்கு இனவாதம் பேசுபவர்கள் இன்று மக்களின் உணர்வுகளைத் தூண்ட முற்படு பவர்கள் ஏன் புலிகளின் காலத்தில் மக்களை புலிகளுக்கு ஆதரவாக திரட்ட இனவாதம் பேசவில்லை? இன்று நாடாளுமன்றத்தில் மாவீரர் தின உரையாற்றுகிறார் ஒரு நாடாளு மன்ற உறுப்பினர். ஆனால் அவர் புலிகளின் காலத்தில் ஒருநாள் தமிழின வாதம் சிந்தித்திருப்பாரா என்றால் இல்லை என்ற பதிலே மிஞ்சுகிறது.

இன்றைக்கு தமிழர்களுக்கு சுதந்திரம் வேண்டுமெனக்கூறுபவர்கள் எப்போதாவது விடுதலை அமைப்பு களுடன் இணைந்து துப்பாக்கி ஏந்திப் போரிட்டார்களா? மக்கள் இவற்றைச் சிந்திக்க மறுக்கின்றனர். காரணம் தமிழ் அரசியல்வாதிகள் அவர்களை சிந்திக்க விடவில்லை. மக்களைச் சிந்திக்க விட்டால் அவர்களது அரசியல் வாழ்வு முடிந்துவிடும்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தமது மாநாட்டில் கூறினார்கள் நாம் அரசாங்கத்துடன் இணைந்து செயற் பட்டால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்று ஆனால் இன்றுவரை எந்த அரசுடனும் அவர்கள் இணைந்ததில்லை. வரலாற் றில் முதல் தடவையாக மைத்திரியுடன் இணைந்துள்ளனர். இதன் பின்னாவது இவர்கள் தமது இனவாத அரசியலை கைவிடவில்லை.

வடபகுதியில் இருந்து இராணுவத்தை முழுமையாக அகற்ற வேண்டுமெனக் கூறுகின்றனர். இது நடவாதென்பது அவர்களுக்குத் தெரியாததல்ல. இதை தமது பிரச்சார மேடைகளில் பயன்படுத்துகின்றனர்.

இராணுவத்தை முழுமையாக அகற்ற வேண்டும் எனும் கோரிக்கையின் மறைமுகப்பொருள் யாதெனில் வடபகுதி தமிழர்களுக்கே அங்கு த.தே.கூ. இன் சுயாட்சி நிறு வப்படவேண்டும். வேலுப்பிள்ளை பிரபாகரன் தனிநாடு கோரினார். த.தே.கூ. சுயாட்சி கோருகிறது. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

## முளைவிடும் காலம் மலர்வது எப்போது?

பல நவீன ஆயுதங்கள் ஆயிரக்கணக் கான போராளிகள் என இருந்தும் எது வும் செய்ய முடியாமல் போய்விட்டது.

நாடாளுமன்றில் சும்மா பேசுவதா லும் பலனில்லை என்பதும் அவர்க ளுக்கு நன்றாகவே தெரியும். எனது நண்பர் கூறினார் நாம் மகிந்தவை ஆதரிக்க வேண்டும். ஏனெனில், அவர் களையும் எமது மற்றைய பிள்ளை களை இறக்காமல் காப்பாற்றினார்.

எனவே நாம் அவருக்கே வாக்களிக்க வேண்டுமெனக் கூறினார். இதை பெரும்பாலான தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அதுதான் உண்மை. இன்று வெளிநாடுகளில், சமூக வலைத் தளங்களில் புலிகளை ஆதரித்தும், மகிந்தவை அவமதித்தும் பதிவுகளை இடுகின்றனர். இவர்களிடம் நான் கோருவது என்னவெனில், இவர்கள் தமிழர்களின் விடுதலைப் போராட் டத்தில் அதாவது சிறு துரம்பையாவது நகர்த்தியுள்ளனரா? துப்பாக்கியை தூக்கியாவது பார்த்துள்ளனரா?

இஸ்ரேல், பலஸ்தீன பிரச்சினையை ஆராய்ந்தால் பலஸ்தீன அராபியர்கள் தமது தேச விடுதலைக்காக தாமே இறங்கி போரிட்டனர். 1 ஆம் 2 ஆம் இண்டிபதாவின்போது குழந்தைகள். பெண்கள், இளைஞர்கள், முதியோர் அனைவரும் போராட்டத்திலும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

அவ்வளவு ஏன் எமது வரலாறு பாடநூல்களில் சிலுவைப்போர் என்ற ஒன்று குறிப்பிடப்படும். அதற்கு உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவ நாடுகளிலுமிருந்தும் போராட மக்கள் செல்கின்றனர்.

இன்றைக்கு ஒரு முஸ்லிம் நாட்டில் பிரச்சினை எனில் உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் தமது சகோதர முஸ்லிம் களுக்காக போராடுகின்றனர். இதை ஏன் தமிழர்களால் செய்யமுடிய வில்லை. தமிழ்நாட்டிலிருந்து இன்று தனிஈழம், தனி தமிழ்தேசம் வேண்டு மெனக் கேட்டோர் அன்று ஏன் யுத்தத்தில் பங்கேற்கவில்லை. மிக முக்கிய விடயங்கள் இவை. ஆனால் இவற்றை இன்றைய அரசியல் வாதி கள் திட்ட மிட்டு அவற்றை மக்கள் சிந்திக்க விடாமல் இனவாத அரசியல் செய்வது மிகவும் வருத்தமளிக்கின்றது.

இந்நிலைமைகள் எப்போது மாறுமோ அப்போதுதான் இனப்பிரச் சினைக்கு தீர்வுவரும். அத்தீர்வை தன்னலமற்ற பதவியாசை அற்ற ஒரு பெருந்தலைவரால் மட்டுமே கொண்டு வர முடியும். இன்றைய தலைவர்கள் இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதைத் துளியும் விரும்பவில்லை. ஏனெனில், தீர்வு கிட்டினால் அதன் பின் அவர்களால் அரசியலில் நிலைக்க முடியாது. இதை மக்களும் புரிந்து கொள்ளும்போது எமக்கான தீர்வு முளைவிடும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை உணரமுடியும்.

- இந்து

# மடு 'பூமலர்ந்தான்' கிராமத்தில் மக்கள் மீள் குடியமர்வு

## வடமாகாண மீன்பிடி அமைச்சர் நேரில் சென்று பார்வை

மடு பிரதேச செயலாளர் பிரிவுக குட்பட்ட தம்பனைக்குளம் கிரா மத்திலிருந்து இடம்பெயர்ந்து. தற்போது மடு பூ மலர்ந்தான் கிரா மத்தில் மீள்குடியேற்றப்பட்டு வரும மக்களை வடமாகாண மீன்பிடி அமைச்சர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

வருடா வருடம் இயற்கை அனர்தத்தால் ஏற்படும் வெள்ளத்தின் காரணமாக மடு பிரதேச. செயலாளர் பிரிவுக் குட்பட்ட தம்பனைக்குளம் கிராமம் வெள்ளத்தில் மூழ்குவது வழமை.

இந்த நிலையில் குறித்த தம் பனைக்குளம் கிராம மக்களை பூ மலந்தான் கிராமத்தில் குடியேற்ற மடு பிரதேச செயலாளர் பல மாதங்களாக முயற்சிகளை மேற் கொண்டு வந்த நிலையில் தம் பனைக்குளம் கிராமத்தில் வசித்து வரும் 364 குடும் பங்களில் தமது சுய விருப்பத்தின் பேரில் பூ மலர்நதான் கிராமத்தில் மீள்குடியேற விரும்பிய 273 குடும்பங்களுக்கு மடு பூ மலர்ந்தான் கிராமத்தில் காணிகள் வழங்கப்பட்ட நிலையில் அந்த மக்கள் குறித்த காணிகளை துப்புரவு செய்து தற்காலிக கொட்டில்களை அமைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் மீள் குடி யேறிய பூ மலர்ந்தான் கிராமத் திற்கு திடீர் விஜயம் மேற் கொண்ட வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் அக்கிராம மக்களை சந்தித்து தேவையான உதவிகள் குறித்து கேட்டறிந்ததுடன், மீள்குடியேறிய மக்களின் அடிப்படை வசதி களை பெற்றுத் தர மீள்குடி யேற்ற அமைச்சருடன் தொடர்பு கொண்டு உரிய உதவிகளை மேற்கொள்வதாகவும் தெரிவித் தார். இதன்போது மடு பிரதேச செயலாளர் சத்தியசோதியும் கலந்துகொண்டார்.


## வாழ்க வளமுடன்

**உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்டவராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.**

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

........................

பெற்றோர் கையொப்பம்


## முரசின் இன்றைய பலன்

(09.03.2015 திங்கட்கிழமை)

ஜய வருஷம் மாசிமாதம் 25 ஆம் திகதி.
சதுர்த்தி திதி / முழுநாளும் சித்தாமிர்தயோகம்
சித்திரை நட்சத்திரம் மாலை 06.28 வரை. பின் சுவாதி
இராகு காலம் 07.54 - 09.24வரை. சுபநேரம் 12.24 - 01.54 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: பெற்றோரின் புத்திமதியைக் கேட்டதால் வரவிருந்த பேரிடர் நீங்குதல்.

**ரிஷபம்**: பொறுமை சகிப்புத்தன்மையி னால் காரிய சித்தி ஏற்பட்டு விடல்.

**மிதுனம்**: சரியான முடிவினை அடைய பிழையான வழியினை அணு காமை.

**கடகம்**: அனுமதிபெற அலைச்சலும் மனத்துயரமும் தக்க வைத்தல்.

**சிம்மம்**: சொந்த நிலத்தில் கால்பதிக்க நம்பிக்கையான தகவல் கிட்டு தல்.

**மீனம்**: தொலைந்தது மீண்டும் பெற்ற தால் இறைவனுக்கு நன்றி கூறுதல்.

**கன்னி**: காதலில் வீசிக்கொண்டிருந்த புயல் நீங்கிவிடல்.

**கும்பம்**: போலி ஆபரணங்கள் கைக் கெட்டும் அபாயமுண்டு.

**மகரம்**: பெற்றோரின் நோய் காரணமாக விடுப்பில் நிற்றல்.

**தனுசு**: பழைய பொருட்களைக் கொள் வனவு செய்ய வந்தவருடன் தகராறு ஏற்படல்.

**விருச்சிகம்**: பந்தயங்களில் பாராட்டும் பணப் பரிசில்களும் கிடைத்தல்.

**துலாம்**: சக ஊழியரால் பதவிக்கு கேடு வரும் அபாயம் பற்றி விழிப் படைதல்.

# சிரிய உள்நாட்டுப்போரில் இரசாயனத்தாக்குதல்

## - சர்வதேச இரசாயன தடை அமைப்பு குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

சிரியாவில் கடந்த சில ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டு போரில் அரச படைகள் இரசாயன தாக்குதல் நடாத்தியது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. அங்குள்ள 3 கிராமங்களில் கடந்த ஆண்டு நடந்த சண்டையின் போது, அரச படைகள் குளோரின் வாயுத் தாக்குதலை அரங்கேற்றி உள்ளன. இதில் 13 பேர் கொல்லப்பட்டதாக சர்வதேச இரசாயன ஆயுத தடை அமைப்பு புகார் கூறியுள்ளது.



இது குறித்து விவாதிப்பதற்காக ஐ.நா.வின் பாதுகாப்பு சபை நேற்று முன்தினம் கூடியது. இதில் சிரியாவின் இரசாயன தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக கொண்டுவரப்பட்ட தீர்மானம உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

கண்டன தீர்மானத்தில், 'சிரியாவில் எதிர்காலத்தில் இது போன்ற இரசாயன தாக்குதல் நடந் தால், ஐ.நா. சபை சாசனம் அத் தியாயம் 7இன்படி கடுமையான பொருளாதாரத் தடை மற்றும் இராணுவ நடவடிக்கையும் மேற் கொள்ளப்படும்' என்று கூறப்பட்டிருந்தது.

பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பு நாடுகளில், சிரியாவின் நட்பு நாடான ரஷயா உடபட 14 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. எனினும் வெனிசுலா மட்டும் தீர்மானத்தை புறக் கணித்தது. இது குறித்து வெனிசுலா தூதர் ரபேல் ரமிரேஸ் கூறுகையில், சிரியாவில் இரசாயன தாக்குதல் நடந்துள்ளதா? என விசாரணை நடாத்தியே முடிவு செய்ய வேண்டும் என கூறினார்.

# வனத்தில் புதைந்த நகரம் கண்டுபிடிப்பு



(ஹோண்டுராஸ்)


ஹோண்டுராஸ் நாட்டில் வனப்பகுதியில் புதைந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹோண்டுராஸ் நாட்டில் மஸ்கியூடியா என்ற பகுதியில் அடர்ந்த வனப்பகுதி உள்ளது. இங்கு பழங்கால நகரம் ஒன்று மண்ணுக்குள் புதைந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'லிடார்' என்ற அதிநவீன முறையில் விண்ணில் இருந்து கதிர்வீச்சுகளை பாய்ச்சி அந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 1000ஆவது ஆண்டு முதல் 1400 ஆண்டு வரை இருந்திருக்க வேண்டும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இங்கு மண்ணுக்குள் புதைந்த பிரமிடுகளும், அதில் புதைக்கப்பட்டவர்களின் மண்டை ஓடுகள் மற்றும் எலும்புக்கூடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த நகரத்தில் மனிதர்கள் நாகரிகத்துடன் வாழ்ந்திருக்கின்றனர் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நகரத்துக்கு வெள்ளை நகரம் அல்லது குரங்கு கடவுள் நகரம் என பெயரிடப்பட்டுள்ளது. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட புதையுண்ட நகரத்தை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஹோண்டுராஸ் அரசு ஈடுபட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# டில்லியில் இரு மாதத்தில் 300 பாலியல் வழக்குகள் பதிவு





இந்தியாவில் தலைநகர் டில்லியில் இந்த வருட தொடக்கத்தில் கடந்த 2 மாதங்களில் மட்டும் 300 பாலியல் பலாத்கார வழக்குகளை பொலிஸார் பதிவு செய்துள்ளனர். கடந்த வருடம் மட்டும் இது போன்று டில்லியில் 2,067 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதுபோக பாலியல் தொல்லை வழக்குகளும் பதிவு செய்யப் பட்டுள்ளது. 2015, கடந்த 2 மாதங்களில் மட்டும் இந்திய தண்டனை சட்டம் 354 மற்றும் 509 பிரிவின் கீழ்(பாலியல் தொல்லை மற்றும் மானபங்கம்) பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 500-ஐ தாண்டியது என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. பெண்களின் புகாரின்படி வழக்குப்பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகள் விரைந்து கைது செய்யப்பட்டால், மாநிலத்தில் இதுபோன்ற நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்று ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியாவின் வளர்ச்சியில் பெண்கள் பங்கும் முக்கியமானது

## – பிரதமர் நரேந்திரமோடி



(டில்லி)

இந்தியாவின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு முக்கியமானது இந்தியப் பெண்களின் வாழ்வில் நல்ல மாற்றங்களை கொண்டு வருவோம் என இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில் "வளர்ச்சிக்கான இந்தியத் திருநாட்டின் பயணத்தில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியமானது. எனது அரசு பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்காக பல திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. மத்திய பட்ஜெட்டில் பல திட்டங்கள் பெண்களுக்கு பெரும் பயன் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் கல்விக்காக, பெண் குழந்தைகளை பாதுகாப்போம், கல்வி கொடுப்போம்" இயக்கம் செயற்படுத்தப்படுகிறாது. உயர்கல்வி மற்றும் திருமணத்திற்காக வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்க வழி செய்யப பட்டுள்ளது.

விரைவில் வன்முறையால் பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு உதவும் வகையில் ஆலோசனை மையங்கள் மற்றும் 181 என்ற தனி தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்படும். இதன் மூலம் சட்ட ரீதியான ஆலோசனைகள் மற்றும் உளவியல் ஆலோசனைகள் வழங்கப்படும். ஒவ்வொரு முறையும் பெண்களுக்கு எதிரான குற்றங்களை பற்றி கேட்கும் போதும் நாம் தலைகுனிய நேர்கிறது. இதை தடுப்பதற்கு நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று மோடி கூறியுள்ளார்.

# ஆப்கானில் தாக்குதல்; ஐந்துபேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் மைனாரிட்டி ஆக வாழும் சுபி பிரிவினரின் மசூதி உள்ளது. நேற்று முன்தினம் மாலை இங்கு துப்பாக்கி ஏந்திய தீவிரவாதிகள் புகுந்தனர். பின்னர் அங்கு இருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். அச்சம்பவத்தில் 5 பேர் குண்டு பாய்ந்து உயிரிழந்தனர். 6 பேர் காயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

# அல்பக்தாதி நகரத்தை மீட்டது ஈராக் இராணுவம்



(வோஷிங்டன்)

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றிய அல்பக்தாதி நகரை ஈராக் இராணுவம் மீட்டது.

ஈராக்கின் மேற்கே யூப்ரடிஸ் நதியின் மீது அமைந்துள்ளது அல்பக்தாதி நகரம் இதன் அருகே உள்ள அல்ஆசாத் விமானப்படைத தளத்தில் அமெரிக்க விமானப் படைப்பிரிவு உள்ளது. இந்நிலையில் பெப்ரவரி13ஆம் திகதி அல்பக்தாதி நகர் மீது திடீர் தாக்குதல் நடாத்திய ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் அதைக் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

இதையடுத்து தீவிரவாதிகள் பிடியிலிருந்து அல்பக்தாதி நகரை மீட்க கடந்த இரு வாரங்களில், 26 முறை அமெரிக்க விமானப் படை வான் வழித் தாக்குதல் நடத்தியது. அத்துடன், ஈராக் இராணுவத்தினரும், ஷியா, சன்னி பிரிவினர் மற்றும் பழங்குடியினர் துணையுடன், தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது தரை வழித்தாக்குதலை நடாத தினர். இவற்றை எதிர்கொள்ள முடியாமல் தீவிரவாதிகள் பின் வாங்கி ஓடியதை அடுத்து அல்பக்தாதி நகரம் மீண்டும் ஈராக் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. அங்குள்ள காவல் நிலையம், யூப்ரடிஸ் நதியின் மீது அமைந்துள்ள மூன்று பாலங்கள் ஆகியவை ஈராக் வசம் வந்துள்ளன. "தரை வழித் தாக்குதலில், அமெரிக்க இராணுவத்தினர் ஈடுபடவில்லை என்பதால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என ஒபாமா அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் லிபியா நாட்டின் தென்பகுதியில் உள்ள எண்ணெய் வயல்கள் மீது ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில், அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த எட்டு பேர் உயிரிழந்தனர்.

# யூதர்களுக்கு எதிராக பிரிட்டனில் தாக்குதல்

பிரித்தானியாவில் யூத நபர் ஒருவருக்கு நிகழ்ந்த இனவெறித் தாக்குதல் வீடியோ இணையத்தில் தீயாய் பரவி வருகிறது.

பிரித்தானியாவின் மான்செஸ்டர் (Manchester) மாகாணத்தில் யூத பத்திரிகையாளர் ஒருவர், யூதர்கள் அணியும் கிப்பா (Kippah) என்னும் தொப்பியை அணிந்து, சாலையில் நடந்து சென்றுள்ளார். அப்போது இவரை பார்த்த நபர்கள் சிலர், நீ யூத இனத்தவனா? என கேலிப் பேசியுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து சிலர் தகாத வார்த்தைகளை பேசி தங்களுக்குள் சிரித்துக் கொண்டுள்ளனர். மேலும் நபர் ஒருவர் இவர் பயணிக்கும் பாதையில், எச்சில் துப்பி தனது வெறுப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் யூதர்களுக்கு எதிராக நடக்கும் இந்த இனவெறி தாக்குதல்களால், அவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்படுவதாக கூறப்படுகிறது.

பிரித்தானியா மட்டுமின்றி பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட சில நாடுகளிலும் யூதர்களை அவமதிப்பது வாடிக்கையாகிவிட்டது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு மாகாணசபையிடம் திட்டங்கள் இல்லை

## பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



(பருத்தித்துறை)

வடக்கில் பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களின் மேம்பாட்டுக்கு மாகாணசபை நிர்வாகம் எவ்வித திட்டங்களையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் நாம் கடந்த ஆட்சிக் காலத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் மேம்பாட்டிற்கு பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுத்திருந்தோம் என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 4.00 மணியளவில் அல்வாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா சனசமூக நிலையத்தில் சர்வதேச மகளிர் தினவிழா, மாதர் சங்கத் தலைவி திருமதி சௌந்தரராஜன் தங்கரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்பு கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி வருமானத்தை ஈட்டிக் கொடுபவர் ஆணாக மட்டுந்தான் இருப்பார். அவர் ஈட்டும் வருமானத்தைக் கொண்டுதான் சிக்கனமாக குடும்பத்தை வழி நடத்த வேண்டிய பொறுப்பு குடும்பத் தலைவிக்கு இருந்தது.

ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. குடும்பத்தில் உள்ள ஆண், பெண் இருவருமே வருமானத்தை ஈட்டுகின்றனர். ஆணுக்குப் பெண் நிகர் என்ற நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.

ஆனாலும் எமது வடக்கு மாகாணத்தில் யுத்தம் காரணமாக பல குடும்பங்கள் குடும்பத் தலைவர்களை இழந்ததால் அக்குடும்பங்கள் பெண் தலைமைத்துவத்தில் தங்கியுள்ளன. அவர்களுடைய ஏழ்மையை தந்திரமாக தேர்தல் பிரசாரங்களின் போது பிரசாரப்படுத்தி அதிகாரத்திற்கு வந்த வடக்கு மாகாணசபை நிர்வாகம் அவர்களின் மறுவாழ்வுக்காக எதனையும் செய்யாமல் அவர்களை ஏமாற்றியுள்ளது.

நூறுநாள் அரசாங்கமும் பல்வேறு வாக்குறுதிகளை அளித்தது. 60 நாட்கள் கடந்த நிலையிலும் எதனையும் முன்னெடுக்கவில்லை.

முன்னைய ஆட்சிக்காலத்தில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் மேம்பாட்டிற்கு பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களை வகுத்து செயற்படுத்தியிருந்தார்.

கால்நடைகள், கோழி வளர்ப்பு, சுயதொழில் அத்துடன் ஒரு வருட வட்டியில்லாக் கடன்களை சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக வழங்கியிருந்தார்.

முன்னைய அரசின் மக்கள் நலத்திட்டங்களை வலுப்படுத்துவதை விடுத்து, அத்திட்டங்களை நிறுத்துவதும் மாற்றியமைப்பதும் என தற்போதை அரசாங்கம் செய்து வருகிறது. முன்னைய ஆட்சியில் வறுமைப்பட்ட மக்களுக்கு வழங்கவென கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பிரதேச செயலகங்களில் தேங்கிக் கிடக்கின்றன.

இருப்பினும் மகளிர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட நம்பிக்கை என்ற மூலதனத்தைக் கொண்டு முன்னேற திடசங்கற்பம் கொள்ள வேண்டும். வறுமைப்பட்ட மக்களின் உயர்ச்சிக்கு நாம் எப்போதும உறுதுணையாக இருப்போம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அல்வாய் பிரதேச மக்கள் சபை உறுப்பினர் வே.யோகநாதன் மற்றும் மாதர் சங்க செயலாளர் சண்டில்யன் அனுசியா, பொருளாளர் உதயகுமார் சரோஜினி மற்றும் சங்க அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் சங்கீதக் கதிரை போட்டி நிகழ்வும் இடம்பெற்றது.

# அவசர நோயாளர்களுக்கு பயன்படாத அம்புலன்ஸ்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அவசர நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டி பயன்படுவதில்லை எனவும், இதனால் வேறு வைத்தியசாலைக்கு செல்ல முடியாது நோயாளர்கள் அவதியுறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாகக் காணப்படும் நிலையில் இவ்வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைகள் இல்லாமையால் அத்தகைய சிகிச்சையை பெற வருபவர்களில் ஒருவர் என்றால் அம்புலன்ஸ் வண்டி மூலம் வேறு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவதில்லை எனவும் இரண்டு மூன்று நோயாளர்கள் என்றால் மாத்திரமே அம்புலன்ஸ் வண்டி மூலம் அனுப்பிவைக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

நோயாளர்கள் வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் வண்டிகள் அவசர நோயாளர்களுக்கு சிகிச்சை பெறுவதற்காகவே உள்ள நிலையில் இவ்வாறு மனிதாபிமானமற்ற முறையில் வைத்தியசாலை நிர்வாகம் செயற்படுவது கவலையளிப்பதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டிகளை நோயாளர்களுக்கு பயன்படும் வகையில் மனிதாபிமானத்துடன் உரியவர்கள் செயற்படவேண்டுமென நோயாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (67)

## சிங்கள...

கிராமங்களில் வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கு நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இந்த பிரதேச மீள்குடியேற்றம் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். நாம் எந்த இனத்திற்கும் எதிரானவர்கள் அல்ல. எல்லா மக்களையும் ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டும்.

நாம் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. இந்த மாவட்டத்தின் எல்லையோரங்களில் சிங்கள மக்கள் குடியிருந்தார்கள். அவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஆனால் புதிய சிங்களக் குடியேற்றங்களையே நாம் எதிர்க்கிறோம்.

இது தவிர,, இங்கு நடைபெறும் நிகழ்வில் இனிவரும் காலங்களில் இந்து, இஸ்லாம், கத்தோலிக்க, பௌத்த மதங்களினுடைய தலைவர்களையும் கட்டாயம் அழைக்க வேண்டும். எல்லா மதத் தலைவர்களும் இருக்கும் போது அந்த சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியும். எனவே அவர்களையும் அழையுங்கள் எனத் தெரிவித்தார்.

## முடிவிற்கு...

காணாமற்போனவர்களைக். கண்டறிய சர்வதேச விசாரணைகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பவற்றை வலியுறுத்தி இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை பிற்போடப்பட்டமையை கண்டித்தும் உள்ளக விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அரசியல் கைதிகள் உடன் விடுதலை செய்யப்பட வலியுறுத்தியும் காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை கண்டறியவும் அவர்களுக்கு நீதி கிடைக்கவும், இன அழிப்புக்கு நீதி கிடைக்கவும் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணையை வலியுறுத்தியும் இலங்கைத் தமிழ் இளைஞர் பேரவையால் முள்ளிவாய்க்காலில் இருந்து முன்னெடுக்கப்பட்ட நடைபவனி நேற்று நல்லூரை வந்தடைந்தது.

இந்த நடைபவனி நல்லூரை வந்தடைந்ததும், நல்லூர் முன்றலில் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டவர்கள் கதறி அழுதனர். அதனைத் தொடர்ந்து உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டவர்களுக்கு மதகுருமார்கள் குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்துவைத்தனர்.

முள்ளிவாய்க்காலில் இருந்து நடைபவனியாக வந்தவர்கள், தமிழாராட்சி மாநாட்டு படுகொலை நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி நடைபவனியை நிறைவுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றம்...

பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான ஜீ.டீ.ஏ.கே.சேனாரத்ன, எச்.டீ.கே.எஸ். ஜயசேகர, வீ.இந்திரன் மற்றும் ஈ.ஏ.எஸ். எதிரிசிங்க ஆகியோரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இதேவேளை, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் 18 பேருக்கும், பொலிஸ் அத்தியட்சகர் ஒருவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேவையின் காரணமாக இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

## மூடுவிழா...

நாட்டின் கடன் சுமையை அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு பணியாற்றும் 450 அதிகாரிகள், இரத்மலானை மற்றும் கட்டுநாயக்க விமான நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதன் பின்னர், அனைத்துலக விமான பராமரிப்பு மற்றும் சரக்கு செயற்பாட்டு நிலையமாகச் செயற்படவுள்ளது.

இந்த விமான நிலையத்தில் பயணிகள் விமானங்களைத் தரையிறக்குவது நிறுத்தப்படவுள்ளது குறித்து ஏற்கனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த விமான நிலையம் ஏற்கனவே இரவு நேரத்தில் மூடப்பட்டு வருவதுடன், பகல் நேரத்திலும் குளிரூட்டிகள், மற்றும் விளக்குகள் அணைத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உடன்படிக்கைகளை...

இடைநிறுத்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனினும், வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வந்தன.

எனினும், சீன நிறுவனம் நேற்று முன்தினம் விடுத்த செய்திக் குறிப்பில், தாம் பணிகளை இடைநிறுத்துவதாகவும் இலங்கை அரசாங்கத்துக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாகவும், தெரிவித்திருந்தது.

நேற்று முன்தினம் முதல் துறைமுக நகர நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் அண்மைக்காலமாக எந்த நேரமும் பரபரப்பாகக் காணப்பட்ட காலி முகத்திடல் பகுதி தற்போது வெறிச்சோடிக் காணப்படுகிறது.

## இந்திய...

கூடாது என்றும், இந்த இரண்டு பிரச்சினைகளும் வெவ்வேறு விதமானவை என்றும், அவரிடம் விளக்கினார்.

மீனவர் பிரச்சினையில் உள்ள சிக்கல்களையும், கருத்து வேறுபாடுகளையும் பேச்சுவார்த்தை மூலமே சுமுகமாக தீர்க்க முடியும் என்றும் சுஷ்மா வலியுறுத்தியதாக அவர் தெரிவித்தார்.

## கழிவு...

இதேவேளை கிணறுகளை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான இயந்திரங்களை வழங்கியுதவுமாறு, இலங்கை தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்திடம் வட மாகாண விவசாய அமைச்சு ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் இது தொடர்பிலான ஆய்வுகள் விரைவில், மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படும் நிலையில், கழிவு எண்ணெயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக்வும் தெரிவிக்கப்படுகிறது.

## அத்துமீறல்...

தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் அப்பகுதி மீனவர்களின் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட வலைகளை அறுத்தும் அதனை கேட்கச் சென்ற உள்ளூர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் 3 மீனவர்கள் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 'புதினப்பலகை"...

போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

அக்காலப் பகுதியில் சுந்தர் என அழைக்கப்பட்ட அவர், ஈழப் போராட்டத்தில், முதன்முதலில் சயனைட் அருந்தி உயிர்த்தியாகம் செய்த, ஈழப் போராட்ட முன்னோடியான பொன். சிவகுமாரனுடன் இணைந்து செயற்பட்டவர்.

1953 ஆம் ஆண்டு கிறிஸ்தோபர் பிரான்சிஸ் என்ற இயற்பெயருடன் நெடுந்தீவில் பிறந்த இவர், பாடசாலைப் படிப்பை ஆரம்ப காலத்தில் நெடுந்தீவிலும் பிறகு மட்டக்களப்பிலும் முடித்தார்.

1972 ஆம் ஆண்டில் இலங்கையின் 1972 அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரான துண்டறிக்கையை விநியோகித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு கைதான மூன்று தமிழ் இளைஞர்களில் கி.பி.அரவிந்தனும் ஒருவர்.

1976 ஆம் ஆண்டில் மீண்டும் கைதாகி டிசம்பரில் விடுதலையானார்.

அதையடுத்து, ஈரோஸ் அமைப்புடன் இணைந்து பணியாற்றிய அவர், 1990களின் ஆரம்பத்தில் பிரான்சுக்குப் புலம்பெயர்ந்தார். அங்கிருந்து அவர், பி.பி.சி. தமிழோசையின் பாரீஸ் நகர செய்தியாளராகவும் பணியாற்றினார்.

பல கவிதைத் தொகுதிகளையும், நூல்களையும் எழுதியுள்ள கவிஞர் கி.பி அரவிந்தனின் கவிதைகளின் பிரெஞ்சு மொழித் தொகுப்பு, 'Le messager de l'hiver', 'ஓர் உறைபனிக்காலக் கட்டியக்காரன்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

'அப்பால்தமிழ்' என்ற இணைய சஞ்சிகையை நடத்திய அவர், 2009 ஆம் ஆண்டு புதினம் இணையத்தளம் நிறுத்தப்பட்ட பின்னர், புதினப்பலகை இணையத்தளத்தை வெளிக் கொணர்வதில் முக்கிய பங்காற்றி கடைசி வரை அதற்காக உழைத்து வந்தார்.

# பொதுத் தேர்தலின் பின்பே தேசிய அரசு சாத்தியம்

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படுவதாயின் அது பொதுத் தேர்தலின் பின்னரே இடம்பெற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் அமைப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்ன? என நேற்றைய ஞாயிறு சிங்கள ஊடகமொன்று வினவிய போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கமொன்று அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டுவந்த தீர்மானத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி உட்பட மற்றும் பல கட்சிகள் உடன்பட மறுத்துள்ளன. இதனால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது சாத்தியமற்றது.

ஜனாதிபதித் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிக்கு ஏற்ப, 100 நாள் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, பின்னர் ஏப்ரல் மாதத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதே தேசிய அரசாங்கத்துக்கு எதிரான கருத்துள்ள கட்சிகள் பலதும் கருத்தாகும்.

தேர்தலுக்கு முன்னர் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எதுவித உடன்படிக்கைகளும் இடம்பெறவில்லை என அமைச்சர் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளதாக அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# யாழ் உட்பட 10 ரயில் நிலையங்கள் நவீன மயப்படுத்தப்படவுள்ளன

(கொழும்பு)

யாழ்ப்பாணம் உட்பட தெரிவு செய்யப்பட்ட பத்து ரயில் நிலையங்கள் நவீனமயப்படுத்தப் படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறந்த செயற்திட்டமாக குறித்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், பின்னர், நாட்டின் ஏனைய சிறிய ரயில் நிலையங்களும் நவீனமயப்படுத்தப்படவுள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த செயற்திட்டத்தின் ஊடாக நவீனமயப்படுத்தப்படவுள்ள ரயில் நிலையங்களுக்கு, நவீன ரக தொழில்நுட்ப கட்டமைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.



இதற்கமைய, கொழும்பு கோட்டை, மருதானை, நீர் கொழும்பு, நானுஓயா, யாழ்ப்பாணம், ஹட்டன், கம்பஹா, ராகமை, அநுராதபுரம் மற்றும் பொலன்நறுவை ஆகிய ரயில் நிலையங்களே நவீனமயப் படுத்தப்படவுள்ளன.

# இலங்கை விஜயத்தை உறுதிப்படுத்திய மோடி

(டில்லி)

இலங்கைக்கான தமது விஜயம் குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமது டுவிட்டரில் தகவல் வெளியிட்டுள்ளார்.

மொரீசியஸ், சீசெல்ஸ் மற்றும் இலங்கை போன்ற நட்பு நாடுகளுடன் சிறந்த உறவை காணவிரும்புவதாக மோடி குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் விஜயம் குறித்து மோடி சிறப்பாக குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கான தமது விஜயம், சந்தோசமானதாகவும் நம்பிக்கையானதாகவும் இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

தாம் இலங்கையின் நாடாளுமன்றத்தில் உரையாற்றவிருப்பதுடன், மகாபோதிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் செல்லவுள்ளமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உரும்பிராயில் தீ

பலாலி வீதி, உரும்பிராய்ப் பகுதியில் வாகனம் திருத்தும் நிலையம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது. கடை தீப்பற்றி எரிவதை அவதானித்தவர்கள் உடனடியாக தகவல் தெரிவித்ததையடுத்து அப்பகுதிக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மின்னொழுக்கே தீ விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# ஆர்.பி.ஜி.குண்டுகள் மீட்பு

மட்டுவில் தெற்கு வேரக் கேணிப் பகுதியில் மூன்று ஆர்.பி.ஜி. குண்டுகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் வீட்டின் உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்த வேளை மேற்படி குண்டுகள் கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சாவகச்சேரி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மற்றும் குண்டு செயலிழக்கச் செய்யும் இராணுவத்தினரின் உதவியுடன் இவற்றை மீட்டனர். (இ)

# லண்டன் சென்ற ஜனாதிபதி பிரதமர் கமரூனையும் சந்திப்பார்



லிசபெத் மகாராணியின் தலைமையின் கீழ் இருக்கின்ற கொமன்வெல்த் அமைப்பின் தற்போதைய நிர்வாகத் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது இரண்டாவது வெளிநாட்டு விஜயமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை லண்டன் வந்தடைந்தார்.

நாளைய தினம் அவர் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனையும் சந்திக்கவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, கொமன்வெல்த் அமைப்பின் பிரமுகர்கள் மற்றும் பிரிட்டிஷ் அரச பிரதிநிதிகள் உள்ளிட்ட பலதரப்பட்டவர்களையும் மைத்திரிபால சிறிசேன சந்தித்து பேச்சுநடத்தவுள்ளார்.

கொமன்வெல்த் தினத்தை ஒட்டி லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் இன்று நடக்கவுள்ள சிறப்பு ஆராதனைகளில் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

அதன்பின்னர் மால்ப்ரோ ஹவுஸ் என்று அழைக்கப்படும் கொமன்வெல்த் அமைப்பின் தலைமையகத்தில் நடக்கவுள்ள நிகழ்வுகளிலும் மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்வார் என்று அவரது ஊடகப்பிரிவு இயக்குநர் தர்மசிறி பண்டார பி.பி.சி.யிடம் கூறினார்.

நாளை 10ஆம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமருனை சந்தித்து பேச்சுநடத்தவுள்ள ஜனாதிபதி இருதரப்பு பிரதிநிதிகள் பலரையும் சந்திக்கவுள்ளார்.

அன்றைய தினமே மாலை, பிரிட்டனில் வாழும் இலங்கையர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திக்கவுள்ளதாக அவரது ஊடகப்பிரிவு இயக்குநர் கூறினார்.

இறுதியாக, நாளை மறுதினம் 11ஆம் திகதி பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் அளிக்கும் இரவு விருந்துபசாரத்திலும் ஜனாதிபதி உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# எப்பொழுதும் மக்களுடன் சேவைகளும் தொடரும்

(யாழ்ப்பாணம்)

எக்காலத்திலும் மக்களுடன் இருந்து மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதையே கட்சியின் நோக்காக கொண்டு நாம் செயற்பட்டு வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உண்மையான மாற்றம் என்ற தொனிப்பொருளில் தொகுதி வாரியாக கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின் தொடர்ச்சியாக காரைநகரில் நேற்றையதினம் இடம்பெற்ற சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே செயலாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



இணக்க அரசியல் ஊடாகத்தான் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் அதற்கு எமக்கு மக்களது ஆதரவும் ஒத்தாசையும் மிகவும் முக்கியமானதாகவும் உள்ளது.

மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாகவே உறவுக்குக் கரமும், உரிமைக்குக் குரலும் கொடுத்து வந்த நாம் தற்போது உரிமைக்குக் குரலும் உறவுக்குக் கரமும் கொடுத்து வருகின்றோம்.

கடந்தகால தவறான அரசியல் தலைமைகளின் வழிநடத்தல்களினால் தான் எமது மக்கள் அளவிடமுடியாத துன்ப துயரங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய அவ்லத்துக்கு உள்ளாகினர்.

எமது கட்சியைத் தவிர ஏனைய சில கட்சிகள் வியாபார அரசியலையே முன்னெடுத்து வரும் நிலையில் தேர்தல் காலங்களில் மட்டுமே மக்களிடம் வருகின்றார்கள்.

தேர்தல் முடிந்ததன் பிற்பாடு அவர்கள் மக்களிடம் சென்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையோ இடர்பாடுகளையோ கேட்டு அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதில்லை.

ஆனால் நாம் எக்காலத்திலும் மக்களுடன் இருந்து மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதையே கட்சியின் நோக்காக கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

எனவே, மக்களுக்கு உண்மையானதும் யதார்த்தமானதுமான அரசியல் விளக்கங்களை தெளிவுபடுத்த வேண்டிய முக்கிய பொறுப்பை உணர்ந்து கொண்டவர்களாக கட்சியின் செயற்பாட்டாளர்களாகிய நீங்கள் எல்லோரும் உண்மையாகவும் நேர்மையாகவும் உழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் எடுத்து விளக்கினார்.

இதன்போது செயற்பாட்டாளர்களின் கருத்துக்கள் ஆலோசனைகள் தொடர்பாகவும் செயலாளர் நாயகம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் பிரதேச இணைப்பாளர் வீ.கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

# பிரதமராக இருப்பதற்கு ரணிலுக்கு தகுதியில்லை

## சாடுகிறது இந்திய காங்கிரஸ்கட்சி

வழிதவறிச் செல்லும் மீனவர்களையும், ஊடுருவல்காரர்களையும் வேறுபடுத்தி பார்க்கத் தெரியாத ரணில் விக்ரமசிங்க, பிரதமராக இருப்பதற்கு தகுதி இல்லாதவர் என்று இந்திய காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இந்திய ஊடகங்களில் வெளியான செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நேற்று முன்தினம் அளித்த பேட்டி பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களை சுடுவோம் என்று மறைமுகமாக அவர் கூறினார். "என் வீட்டுக்குள் ஒருவர் அத்துமீறி நுழைய முயன்றால், அவரை நான் சுடலாம். அதில் அவர் கொல்லப்படலாம். ஆனாலும், அப்படி செய்ய சட்டம் எனக்கு அனுமதி அளிக்கிறது" என்று அவர் கூறினார்.

இதுபற்றி அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் அபிஷேக் சிங்வி சமூக வலைத்தளத்தில் எழுதி இருப்பதாவது,

ஆமாம், மிஸ்டர் ரணில், உங்கள் வீட்டில் ஊடுருபுபவர்களை நீங்கள் சுடலாம். ஆனால், பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் அப்பாவிகளை நீங்கள் சுட்டால், நீங்களும் சுடப்பட வேண்டியவர். கொலைக் குற்றத்துக்காக நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்.

ஊடுருபவர்களையும், வழி தவறி செல்லும் மீனவர்களையும் வேறுபடுத்திப் பார்க்கத் தெரியாமல், சுடுவது ஒன்றே தீர்வு என்று கருதினால், ரணில் விக்ரமசிங்க, பிரதமராக இருக்க தகுதி இல்லாதவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.